இனி ரகசியம் அல்ல!

ஆட்சிகள் மாறும்போது காட்சிகளும் மாறும். இது தவிர்க்கவியலாத அரசியல் தத்துவம்.
இலங்கையிலும் அண்மையில் ஆட்சி மாறிவிட்டதல்லவா? இனி என்ன, காட்சிகளும் மாற வேண்டியதுதானே...!
முன்னைய

பக்கம் 02

பக்கங்கள்: 13

காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 28 திங்கட்கிழமை 13.01.2020 கதிர் 69

# அமெரிக்க,ரஷ்ய,சீன உயரதிகாரிகள் இன்று ஒரே சமயத்தில் கொழும்புக்கு!

## இராஜதந்திர நடவடிக்கைகள் தலைநகரில் வெகு மும்முரம்

கொழும்பு,ஜனவரி 13
அமெரிக்கா,ரஷ்யா,சீனா ஆகிய மூன்று வல்லாதிக்க நாடுகளினதும் உயர்மட்டத் தலைவர்கள் இன்று ஒரே சமயத்தில் கொழும்பில் தரித்துள்ளனர். அவர்கள் இலங்கைத் தரப்போடு பல மட்டங்களில் இராஜதந்திர நடவடிக்கைகளிலும் மும்முரமாக ஈடுபடுவர் எனக் கொழும்பு அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.


பக்கம் 03





## ஜனாதிபதி கோட்டாபயவை சந்திக்க எதிர்பார்த்துள்ளோம்

### கூறுகிறார் செல்வம் எம்.பி.



கொழும்பு, ஜன.13
தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து விரைவில் தாங்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச்சந்தித்துப்பேசவுள்ளனர் எனத்

பக்கம் 03

## சுவரோவியங்கள் மீது கழிவு ஒயில் தாக்குதல்



யாழ்ப்பாணம், ஜன. 13
கொடிகாமத்தில் அண்மையில்வரையப் பட்ட சுவரோவியங்கள் மீது நேற்று முன்தினம் இரவு

பக்கம் 03

## தெல்லிப்பளையில் டிராக்டரை மோதித் தள்ளிய அதிவேக ரயில்



யாழ்ப்பாணம், ஜன. 13
தெல்லிப்பளையில் டிராக்டரயில் மோதித் தள்ளியது. டிராக்டரின் பெட்டி மட்டும் விபத்தில் சிக்கிக் கொண்டதால் சாரதி தெய்

பக்கம் 03

## யாழ். நகர இரும்பகத்தில் நேற்று மதியம் தீ விபத்து!




யாழ்ப்பாணம், ஜன. 13
யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதியில் அமைந்துள்ள இரும்பகம்ஒன்றில்நேற்று மதியம் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.
உடனடியாக யாழ். மாநகர

பக்கம் 03

## கஞ்சாப் பொதியுடன் நேற்று கிளிநொச்சியில் பெண் கைது!



கிளிநொச்சி, ஜன.13
கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சிப் பகுதியில் பெண்ணொருவரிடம் இருந்து கஞ்சாப்போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

பக்கம் 03

## ரி.ஐ.டியால் இரண்டு பேர் உடையார்கட்டில் கைது!

முல்லைத்தீவு, ஜன.13
முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு, உடையார் கட்டுப் பகுதியில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் நேற்று முன்தினம் இருவர் கைது

பக்கம் 03

## போதைப்பொருளுடன் 19 இளைஞர்கள் கைது!

### சிவனொளிபாதமலைக்குச் சென்றவேளை



கொழும்பு, ஜன.13
போதைப்பொருள்களுடன் சிவனொளிபாதமலைக்கு யாத்திரை செய்யச்

பக்கம் 03

## புலனாய்வுப் பிரிவைக் கலைத்த எஸ்.ரி.எவ். கட்டளை அதிகாரி!

### நவ சிங்கள ராவய குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.13
ஏப்ரல் 21 தாக்குதலுக்கு முன்னதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையின்புலனாய்வுப்பிரிவைக்கலைத்து விடுவதற்குப் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளையிடும் அதி

பக்கம் 03

## கூட்டமைப்புக் கொழும்பில் களமிறங்குவது; நன்கு ஆராய்ந்தே முடிவு என்கிறது புளொட்

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஜன.13
எதிர்வரும்நாடாளுமன்றத் தேர்தலில்வடக்கு-கிழக்குக்கு வெளியில் போட்டியிடுவது தொடர்பில் இறுதி முடிவைக் கூட்டமைப்பு இன்னும் எடுக்கவில்லைஎனத்தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், அவ்வாறு போட்டியிடுவதாயின் சாதக, பாதக நிலைமை

பக்கம் 03

## எழுதுமட்டுவாளில் பஸ் மோதி ஆறு வயதுச் சிறுமி படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன.13
எழுதுமட்டுவாள் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில், 6 வயதுச் சிறுமி ஒருவர் படுகாயமடைந்தார். பஸ்ஸில் இருந்து இறங்கி, வீதியைக் கடக்க முற்பட்ட சிறுமியை எதிரே வந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்மோதியுள்ளது. இதில் படுகாயமடைந்த

பக்கம் 03

காலைக்கதிர் Kalaikathir



# மீண்டும் வரையப்பட்ட ஓவியம்




கொடிகாமத்தில் அண்மையில் வரையப்பட்ட சுவரோவியங்களில் ஒன்றுக்கு இனந்தெரியாத நபர்களால் கழிவு ஓயில் ஊற்றப்பட்டிருந்தது. அதுபற்றிய செய்தி முன் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

இந்த விசமத்தனமான செயற்பாடு நேற்று முன்தினம் இரவுவேளை இடம்பெற்றிருந்தது.

ஆனால் அப்பகுதி இளைஞர்கள் சற்றும் தளராது, விஷமிகளுக்கு பதிலடி கொடுக்கும் முகமாக நேற்று அந்தச் சுவரோவியத்தை மீண்டு வரைந்துள்ளனர்.

# முல்லைத்தீவில் நேற்று மாலை இளைஞர் விபத்தில் உயிரிழப்பு



முல்லைத்தீவு மூங்கிலாறு பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இந்த இளைஞன் செலுத்திய மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதியதால் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயம் அடைந்த இளைஞன் மீட்கப்பட்டு புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மூங்கிலாறு பகுதியை சேர்ந்த ஆனந்தராசா பிரசன்னா (வயது24) என்ற இளைஞரே பலியாகியுள்ளார்.

இந்த இளைஞன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்துக்கு தெரிவான மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விபத்துத் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தேசியக் கல்வியியற் கல்லூரிகளுக்கு மிக விரைவில் நிரந்தரப் பீடாதிபதிகள்

கொழும்பு, ஜன.13

தேசியக் கல்வியியல் கல்லூரிகளுக்கு நிரந்தர பீடாதிபதிகளை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் பல வருடங்களாகப் பதில் பீடாதிபதிகளே பீடாதிபதிகளாகச் செயற்படுகின்றனர் எனக் கல்வி அமைச்சின் செயலாளர் சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

இதனால், தேசிய கல்வியியல் கல்லூரிகளின் நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலையில், தகுதிவாய்ந்தோருக்கு இன்று நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேர்முகத் தேர்வில் சித்தியடைபவர்கள், பீடாதிபதி, உப பீடாதிபதி மற்றும் ஏனைய பிரதான பதவிகளுக்கும் நியமிக்கப்படவுள்ளனர் எனக் கல்வி அமைச்சு கூறியுள்ளது. (ஐ)

# 2 மாத பரோல் முடிந்து மீண்டும் சிறை திரும்பினார் பேரறிவாளன்



சென்னை, ஜன.13

இரண்டு மாதம் பரோல் முடிந்து சென்னை புழல் சிறைக்கு திரும்பிய பேரறிவாளனை, அவரது தாயார், அற்புதம்மாள் கண்ணீர் மல்க வழியனுப்பிவைத்தார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு சிறை தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன், தனது தந்தையின் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவரை அருகில் இருந்து கவனித்துக்கொள்ள ஏதுவாக பரோலில் வெளியே வந்தார்.

இரண்டு மாத பரோல் முடிவடைந்த நிலையில், ஜோலார்பேட்டையில் உள்ள பேரறிவாளனின் இல்லத்தில் இருந்து துப்பாக்கி ஏந்திய பொலிஸாரின் பாதுகாப்புடன் அவர் மீண்டும் புழல் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். செய்தியாளர்களைச் சந்தித்த அற்புதம்மாள், தமிழக அரசு விரைவில் தனது மகனை விடுதலை செய்யவேண்டும் என உருக்கத்துடன் கோரிக்கை விடுத்தார்.

# 15 வயதுச் சிறுமியை பல மாதங்களாக வன்புணர்வு செய்ய உதவியவர் கைது

## பிரதான சந்தேக நபருக்கு வலைவீச்சு

வவுனியா, ஜன.13

வவுனியா, ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 வயதுச் சிறுமி ஒருவரை கடந்த பல மாதங்களாக வன்புணர்வு செய்து வந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரைப் பொலிஸார் தேடி வருகின்றமையுடன், அந்த நபருக்கு உதவிய குற்றச்சாட்டில் உறவினரான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, ஓமந்தை பெரியபுளியங்குளம் பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமி ஒருவரை கடந்த ஜூலை மாதத்தில் இருந்து உறவினர் ஒருவரின் துணையுடன் இளைஞர் ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

அந்தச் சிறுமியின் உடலில் மாற்றங்கள் ஏற்பட்டதை அவதானித்த பெற்றோர் சிறுமியை விசாரித்தபோது தனக்கு நடந்த சம்பவங்களை தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பெற்றோரால் ஓமந்தைப் பொலிஸில் நேற்று முன்தினம் மாலை செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக வன்புணர்வுக்கு உதவிய குற்றச்சாட்டில் உறவினரான 24 வயது இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். பிரதான சந்தேக நபரான 29 வயது இளைஞனைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

சிறுமி கர்ப்பம் தரித்துள்ள நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-100)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சிப் பீடத்துக்கு எதிரான விசாரணைகளை முடக்கி விடுவது இந்தக் காட்சி மாற்றத்தில் முக்கியமானது.

பலதுறைகளில் - பல அமைச்சுகளில் - பல மட்டங்களில் - விசாரணைகளும், புலனாய்வுகளும் முனைப்பாக முன்னெடுக்கப்படுகின்றன.

தகவல்கள் துருவப்படுகின்றன.

அவற்றில் ஒன்று முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவுக்கு எதிரானது.

2010 ஜனாதிபதித் தேர்தலில் அப்போதைய ஜெனரல் சரத் பொன்சேகா தோற்கடிக்கப்பட்டமையை அடுத்து, அவருக்குச் சார்பானவர்கள் என்ற கருத்தில் இராணுவத்தில் பல 'களை' எடுப்புகள் நிகழ்ந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அப்போது இராணுவச் சேவையையும், நாட்டையும் - விட்டு ஓடியவர்களில் மகேஷ் சேனநாயக்காவும் ஒருவர். வெளிநாட்டுக்கு சென்ற அவர், அமெரிக்கத் துணை இராணுவ அணி ஒன்றுடன் சேர்ந்து பணியாற்றினார்.

2015இல் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானதும் மகேஷ் சேனநாயக்கா நாடு திரும்பினார். அவரை மீண்டும் படைச் சேவையில் சேர்த்துக் கொண்டார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. குறு கிய காலத்தில் வடக்கின் தளபதியாய் பொறுப்பேற்ற அவர் பின்னர் இராணுவத் தளபதியானார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலத்தின் இறுதிக் கட்டத்தில் இராணுவச் சேவையில் இருந்து ஓய்வுபெற்ற ஜெனரல் மகேஷ் சேனநாயக்கா பின்னர் அரசியலில் இறங்கி, ஜனாதிபதித் தேர்தலில் தென்னிலங்கைக் கட்சியான தேசிய மக்கள் கட்சி சார்பில் போட்டியுமிட்டு, ஐம்பதாயிரம் வாக்குகளையும் பெற்றார்.

இந்தத் தேர்தலில் கோட்டாபய வெற்றி பெற்று மீண்டும் அதிகாரம் ராஜபக்ஷாக்கள் வசம் வந்ததும் பழையபடி நாட்டை விட்டு வெளியேறினார் மகேஷ் சேனநாயக்கா.

ஆட்சி மாறி, காட்சியும் மாறிய பின்னர் நடக்கும் விசாரணைகளின் வளையத்துக்குள் சிக்கிய நபர்களுள் முக்கியமானவராக மகேஷ் சேனநாயக்கா உள்ளாராம். அவர் தளபதியாக இருந்த சமயத்தில் பாதுகாப்பு அமைச்சின் இணைப்புச் செயலாளராக இருந்தவர் திலின சுரஞ்சித். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மருமகன். திலினவும் மகேஷும் சேர்ந்து இராணுவத்துக்கு ஆயுதம் வாங்கியமை தொடக்கம் உணவுப் பொருள்கள் கொள்வனவு செய்தமை வரை பல விடயங்களில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்று கூறும் ஆட்சிப் பீடத்தின் அதிகார மையங்கள், அது குறித்து விரிவான விசாரணைகளை - நோட்டங்களை - தாம் ஆரம்பித்திருக்கின்றன என்று தகவல்.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தும் முயற்சி. ஒரு புறம் ராஜபக்ஷக்களுடன் முரண்டு பிடித்த மகேஷ் சேனநாயக்காவுக்குச் 'செக்' வைத்தல். மறுபுறம். சுதந்திரக் கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேன அதிகமாக எகிறாமல் - குதிக்காமல் - அடக்கி வைக்கும் ஏற்பாடு. - இப்படி இரட்டைத் தந்திரம் கட்டவிழ்கின்றது.

இதே சமயம் கடந்த ஏப்ரல் 21தாக்குதலை அடுத்து, கைதான சில முக்கிய நபர்கள் குறித்து அப்போது அமைச்சராக இருந்த ரிஷாத் பதியுதீன் தன்னிடம் இரண்டு, மூன்று தடவைகள் தொடர்புகொண்டு விசாரித்தார் என அச்சமயத்தில் மகேஷ் சேனநாயக்கா பகிரங்கப்படுத்திய விடயம் குறித்தும் புதிய விசாரணைகளுக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக தெரிகின்றது.

ஆனால், எது என்றாலும் என்னைக் கைது செய்து விசாரியுங்கள் என்று ரிஷாத் பதியுதீன் புதிய ஆட்சிப் பீடத்துக்கு சவால் விட்டு வருகின்றார்.

அந்தச் சவாலுக்குப் பக்கபலமாக சில அரபு நாடுகள் இருக்கின்றன எனக் கருதும் கொழும்பு, அதனால் இந்த விடயத்தில் ரிஷாத்துடன் முண்டுப்படாமல் - முறுகுப்படாமல் - ஒத்துப் போகும் மென்மைபேணும் தந்திரத்தையே கையாள விரும்புகின்றது.

ஆதனால் ரிஷாத் விசாரிக்கப்படுவார், நோண்டி நுங்கெடுக்கப்படுவார், தோண்டித் துருவப்படுவார், எனினும் கைது செய்யப்பட மாட்டார் என்கின்றன விடய மறிந்த வட்டாரங்கள்

★ ★ ★

எந்த நேரத்தில் மத்தள சர்வதேச விமான நிலையத்தைத் திறந்தார்களோ தெரியவில்லை. ஆரம்பம் முதல் அதனைச் செயற்பட வைக்கும் முயற்சிகள் தொடர்ந்து நொண்டுகின்றன.

2015இல் மஹிந்த ராஜபக்ஷக்கள் அரசு அதிகாரத்தில் இருந்து இறக்கப்பட்டதும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம், அரசின் நெற் களஞ்சியப்படுத்தும் களஞ்சியமாக மாறியது.

மீண்டும் ராஜபக்ஷக்கள் அதிகாரத்துக்கு வந்ததும் அந்த விமான நிலையத்தை இயக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் எந்த விமான சேவை நிறுவனமும் அங்கு தமது விமானங்களை இறக்க முன்வரவில்லை.

ஆக, ஆபத்து வேளையில் கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு மாற்றாக பயன்படுத்தும் தயார் நிலையில் மட்டும் அது வைக்கப்பட்டிருந்தது. அப்படி சிக்கலை எதிர்நோக்கும் விதத்தில் அதன் அதிர்ஷ்டம் அமைந்திருக்கின்றது போலும்.

கடந்த நவம்பர் 18ஆம் திகதி - ராஜபக்ஷக்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வந்த அன்று - பண்டார நாயக்கா விமான நிலையத்தில் சீற்றகாலநிலை நிலவியதால் எமிரேட்ஸ் விமான சேவை நிறுவனத்தின் போயிங் - 777 விமானம் ஒன்று 73 பயணிகளுடன் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்துக்கு திருப்பி விடப்பட்டது.

அந்த விமான நிலையம் திறந்தது 2013 இல். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு அங்கு சென்ற முதலாவது எமிரேட்ஸ் விமானம் அதுதான்.

விமானம் இறங்கி, எரிபொருளை நிரப்பி விட்டு, கட்டுநாயக்காவில் காலநிலை சீரானதும் புறப்பட்டுச் சென்று அங்கு இறங்கியது.

அதற்கு இடையில் விமானம் எதிர்கொண்ட சிக்கல்கள் அண்மைக்காலம் வரை பயணிகளுக்குக்கூடத் தெரிவிக்கப்படவில்லை. அப்படி என்ன நடந்தது?

காட்டை வெட்டி, காட்டுக்கு மத்தியில் அல்லவா அந்த விமான நிலையத்தை அமைத்துள்ளார்கள்?

டுபாயிலிருந்து மாலைதீவின் மாலே வழியாக கொழும்பு நோக்கி வந்த அந்த விமானம் அன்று முன்னிரவு 6.57 மணி போல தரை இறங்கியபோது நரி ஒன்று அதன் சில்லில் அகப்பட்டு நசியுண்டு போனதாம். அதேபோல அது மீளப்புறப்பட்டபோது அந்த விமானத்தில் பறவை மோதியும் சிறிது பாதிப்பு ஏற்பட்டதாம்.

2018 ஏப்ரலில் இதேபோல 177 பயணிகளுடன் வந்த 'ப்ளை டுபாய்' விமானத்திதைப் பறவைக் கூட்டம் தாக்கியமையால், அதன் பாதிப்புகள் குறித்து பரிசீலித்து முடிவெடுக்கும் வரை - காலை 7 மணி முதல் பிற்பகல் 2.30 வரை அந்த விமானம் அந்த விமான நிலையத்தில் சும்மா நின்றதும், 177 பயணிகளும் சுமார் ஏழரை மணி நேரம் அந்தரிக்க வேண்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

'ராஜபக்ஷ' என்ற பெயரைக் கொண்டதால் இந்த விமான நிலையமும் ஒரே நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது போலும்....

- மின்னல் -

## அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று இரவு கொழும்பு வரும் சீன வெளிவிவகார அமைச்சர் வெங் யி நாளை இங்கிருந்து புறப்பட முன்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோரைச் சந்திக்கவிருக்கின்றார்.

இந்தப் பேச்சுகளில் அம்பாந்தோட்டை துறைமுகக் குத்தகை விடயம் முக்கியத்துவம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைவரும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி லெவ்ரோவ்க்கும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனா இடையிலான இருதரப்பு பேச்சு நாளை இடம்பெறவுள்ளது.

அவர் இங்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரையும் சந்தித்துப் பேசுவார்.

அத்துடன், இருதரப்பினரதும் வெளிவிவகார அமைச்சர்கள் சேர்ந்து நடத்தும் கூட்டு செய்தியாளர் மாநாடு நாளை நண்பகல் 12 மணியிலிருந்து 12.40 வரை வெளிவிவகார அமைச்சில் இடம்பெறவுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் இதன் போது கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேசமயம், தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் முக்கிய அதிகாரியான அலிஸ் ஜி வெல்ஸ் இன்றும் நாளையும் கொழும்பில் இருதரப்பு பேச்சுகளில் ஈடுபடுகின்றார்.

அவரும் இங்கு இலங்கையின் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் விரிவான கலந்துரையாடல்களில் ஈடுபடுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் கூட்டத்தில் இலங்கை தொடர்பான விடயம் வரும்போது அந்தந்த நாடுகள் எத்தகைய அணுகுமுறையைக் கையாளத் திட்டமிட்டுள்ளன என்பதை மேற்படி மூன்று நாட்டுத் தலைவர்களிடமும் கேட்டறிந்து கொள்வதில் இலங்கைத் தரப்பு அதிக கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ரி.ஐ.டியினால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளனர். உடையார்கட்டு தெற்கு, வடக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில், அண்மையில் வெடிமருந்துகளை வைத்திருந்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட நபருடன் தொடர்பை வைத்துள்ளனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டே இவ்விருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தொடர்பில், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## தெல்லிப்பளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாதீனமாக உயிர் தப்பினார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்த குளிரூட்டப்பட்ட அதிவேக ரயிலுடன் தெல்லிப்பளை மாவிட்டபுரம் பகுதியில் ரயில்வே கடவை ஊடாகக் கடக்க முற்பட்ட டிராக்டரே இவ்வாறு விபத்தில் சிக்கிக்கொண்டது. (ஐ-07)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

எனினும் இதுவரை அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆற்றிய அக்கிராசன உரையில் தமிழ் மக்கள் தொடர்பாக எந்தவொரு விடயமும் இடம்பெறவில்லை.

அந்த வகையில் அவ்வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான கோரிக்கையை விடுத்திருந்தார். இற்றைவரைக்கும் அந்தச் சந்தர்ப்பம் எங்களுக்குக் கிட்டவில்லை.

இருந்தாலும் எங்கள் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியிடம் எடுத்துச்சொல்லவேண்டிய கடமை எங்களுக்கு இருக்கின்றது.

இதேவேளை, தமிழ் பேசும் மக்களாகிய தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி பேசாமலிருக்கின்றமை கவலையளிக்கிறது. பெரும்பான்மையினரான சிங்கள மக்களின் பிரச்சினைகளைக் கையாள்வதிலேயே அவருடைய செயற்பாடுகள் கரிசனையாக இருக்கின்றமையை அவருடைய பேச்சுக்களில் அறியக்கூடியதாக இருக்கின்றது.

இந்தச் சூழலில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாட வேண்டிய பொறுப்பு உள்ளது. அவரை சந்திக்க எதிர்பார்த்துள்ளோம் – என்றார். (ஐ)

## கூட்டமைப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்றார்.

வடக்கு – கிழக்குக்கு வெளியிலும் கூட்டமைப்பு போட்டியிடவுள்ளதாகக் கூறப்படுவது குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு – கிழக்குக்கு வெளியில் போட்டியிடுவது தொடர்பில் கட்சிக் கூட்டங்களில் யோசிக்கப்பட்டது. ஆனால் அது தொடர்பில் ஒரு தீர்க்கமான முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை. வடக்கு – கிழக்குக்கு வெளியே போட்டியிடுவது சிலவேளைகளில் பல பிரச்சினைகளை அல்லது தாக்கங்களைச் செலுத்தலாமென்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

எங்கள் கட்சியைப் பொறுத்தவரை இவ்வாறு வடக்கு – கிழக்குக்கு வெளியில் போட்டியிடுவது தொடர்பில் உள்ள நிலைமைகளைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சொல்லியுள்ளோம். அதனையே ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் சொல்லியிருக்கின்றார்.

வடக்கு – கிழக்குக்கு வெளியில் போட்டியிடுவதன் மூலம் நாங்கள் ஓர் ஆசனத்தைத்தானும் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை இருக்குமாயின் அநியாயமாக மற்ற தமிழ் சிறுபான்மைக் கட்சிகளைக் குழப்புகின்ற அல்லது அவர்களைப் பாதிக்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டு விடலாம். அது மாத்திரமல்ல, அந்தச் சிறுபான்மைக் கட்சிகளுடன் எங்களுக்கு இருக்கக் கூடிய நல்லுறவு அற்றுப்போகிற நிலைமை வந்து விடும்.

ஆகவே இது குறித்து நாங்கள் மிகக் கவனமாகச் சிந்தித்துத்தான் செயற்படவேண்டும். – என்றார். (ஐ-07)

## சுவரோவியங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழிவு ஒயில் வீசப்பட்டுள்ளது.

நாட்டைத் தூய்மைப்படுத்துவோம் என்ற செயற்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் இளைஞர், யுவதிகளால் சுவரோவியங்கள் வரையப்பட்டு வருகின்றன. கொடிகாமம் பகுதியில் வரையப்பட்டிருந்த சுவரோவியங்கள் மீதே இரவு வேளை விசமிகள் கழிவு ஒயில் வீசியுள்ளனர். (ஐ)

## எழுதுமட்டுவாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுமி, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். விபத்துடன் தொடர்புடைய இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ், கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## புலனாய்வுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரியான பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.ஆர். லத்தீப் நடவடிக்கை எடுத்திருந்தார் என நவ சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மாகல்கந்தே சுதந்த தேரர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் –

சஹ்ரானின் தாக்குதலுக்கு அண்மித்த காலப் பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவை லத்தீப் கலைத்துள்ளார். ஏப்ரல் தாக்குதலுக்கு 08 மாதங்களுக்கு முன்னர் தாக்களவாஞ்சிக்குடியில் உள்ள புலனாய்வுப் பிரிவு கலைக்கப்பட்டுள்ளது. தற்போதுவரை, களவாஞ்சிக்குடி விசேட பொலிஸ் அதிரடிப்படை முகாமில் புலனாய்வுப் பிரிவு இல்லை. அங்கிருந்த புலனாய்வு அதிகாரிகள் கொழும்பு, மருதானைக்கு அழைக்கப்பட்டுவிட்டனர் – என்றார். (ஐ)

## போதைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற 18 இளைஞர்கள் ஹற்றன் விசேட குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று முன் தினம் தியகல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் பொலிஸ் நிலையத்தின் விசேட குற்றத் தடுப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் மாலை 3.00 மணி முதல் ஆறு மணிவரை மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து கேரளக் கஞ்சா, ஹெரோய்ன், மதன மோதக்கய, போதை மாத்திரைகள் போன்றவை மீட்கப்பட்டுள்ளன. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு, இரத்தினபுரி, பொலனறுவை, நீர்கொழும்பு, அனுராதபுரம், காலி, கம்பளை உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் ஹற்றன் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படவுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சிவனொளிபாதமலை புனித பிரதேசத்திற்குப் போதைவஸ்துக்களைக் கொண்டு செல்வதைத் தடுப்பதற்காகவும், போதைவஸ்துப் பாவனையினால் ஏற்படும் விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும் ஹற்றன் பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கைகளை மோப்ப நாய்களின் உதவியுடன் ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# சுன்னாகத்தில் கடத்திச் செல்லப்பட்ட மோ.சைக்கிள் நிலாவரையில் தீக்கிரை



யாழ்ப்பாணம், ஜன.13

நிலாவரைப் பகுதியில் முற்றாக எரிக்கப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளை எரியூட்டியவர்கள் தொடர்பாக எந்தத் தகவலும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மோட்டார் சைக்கிள் சனிக்கிழமை இரவு சுன்னாகம் பகுதியில் வைத்துக் காணாமல் போயிருந்தது எனக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-07)

# பாலியாற்றில் டிப்பர் மோதி டிராக்டர் சாரதி படுகாயம்!

மன்னார், ஜன. 13

மன்னார் – யாழ்ப்பாணம் பிரதான வீதி, மூன்றாம்பிட்டி, பாலியாற்றுப் பகுதியில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற விபத்தில், ஒருவர் படுகாயமடைந்த நிலையில் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாலியாற்றுப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன் வெள்ளாங்குளம் பகுதியில் இருந்து இலுப்பைக் கடவை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்த டிப்பர் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது, பாலியாற்றைச் சேர்ந்த உழவு இயந்திர ஓட்டுநர் படுகாயமடைந்தார். (ஐ)

# மகளின் இழப்பை தாங்கமுடியாது தீப்பற்ற வைத்த தாய் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 13

மகளின் இழப்பைத் தாங்க முடியாது தவறான முடிவெடுத்துத் தீப் பற்றவைத்த தாய் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கொக்குவில் கிழக்கில் நடந்துள்ளது. மகேஸ்வரன் தபேஸ்வரி என்ற 48 வயதுடைய தாயே உயிரிழந்துள்ளார்.

இவரது மகளான ம.கஜானி புதன்கிழமை 8ஆம் திகதி தவறான முடிவெடுத்துத் தூக்கிட்டு உயிரிழந்தார். 17 வயதான கஜானி உயர்தரப் பிரிவு மாணவியாவார்.

அன்றைய தினம் வீட்டில் பேர்த்தியும், கஜானியும் மட்டுமே இருந்தனர். தாய் வவுனியாவுக்குச் சென்றிருந்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு இந்த விடயம் அறிவிக்கப்பட்டு அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். தாயும் வவுனியாவில் இருந்து திரும்பியிருந்தார்.

விசாரணை நடந்துகொண்டிருந்த நேரம் மகளின் இழப்பைத் தாங்க முடியாது அவர் அறையொன்றுக்குள் சென்று தாழிட்டுக் கொண்டமையுடன், தனக்குத் தானே தீயையும் பற்றவைத்துள்ளார்.

அங்கிருந்த பொலிஸார் அவரை மீட்டு நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

அன்று முதல் தொடர் சிகிச்சையில் இருந்தவர் கடந்த சனிக்கிழமை காலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். (ஐ)

## யாழ். நகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீயணைப்புப் பிரிவுக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இருப்பினும் இந்தக் கடை பகுதியளவில் சேதமடைந்ததுடன் பொருள்களும் தீயில் கருகியுள்ளன. இதனையடுத்து யாழ். பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸாரும் இராணுவத்தினரும் உடனடியாகச் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளின்போது இந்தத் தீ விபத்து மின்சார ஒழுக்குக் காரணமாக நிகழ்ந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-07)

## கஞ்சாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகத்திற்கு இடமாக பெண் ஒருவர் நடமாடுகின்றார் எனக் கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் அந்தப் பெண்ணைப் பரிசோதனை செய்தனர்.

இதன்போது 2 கிலோ 100 கிராம் கஞ்சாப் போதைப் பொருள் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அந்தப் பெண்பளைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

பெண்ணிடம் முதற்கட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## கவனிக்கப்படாத தீர்க்கதரிசனங்கள்

**சில விடயங்கள் இப்படித்தான் அமையும் அல்லது நடக்கும் என்று கூறப்படும் போது, அந்தக் கூற்று வேடிக்கைக்குரியதாக, நம்பமுடியாததாக இருக்கும். பின்னாள்களில் நிஜத்தில் அவை நடக்கும்போது – யதார்த்தத்தில் நிகழும் போது – முன்னர் அப்படி நடக்கலாம் என்று கூறியவர்களை மக்கள் மறந்து விடுவார்கள்.**

**எமது அரசியலில் இடம்பெற்ற இரண்டு சம்பவங்களை நினைவுபடுத்தலாம் என நினைக்கிறோம். அந்த விடயங்கள் – நிகழ்வுகள் – எமக்குப் பிடித்தமானவையாக அமையா விட்டாலும் அவற்றில் உள்ள படிப்பினை – உண்மை – நாம் சிந்திக்க வேண்டிய பாடங்களைக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் கவனிக்க வேண்டும்.**

**இலங்கைத் தமிழரசுக் கட்சியினரும் ஏனையோரும் சமஷ்டித் தீர்வு குறித்து அறுபதுகளின் கடைசியிலும் எழுபதுகளின் ஆரம்பத்திலும் பேசிக் கொண்டிருந்த போது, 'இது சரிப்பட்டு வராது, தமிழர்களுக்குத் தனியாக ஒரு நாடு கோருவதே சரியான மார்க்கமாக இருக்க முடியும்' என்ற சாரப்பட கருத்து வெளியிட்டனர் இரண்டு தமிழ்த் தலைவர்கள்.**

**ஒருவர் – 1963 முதல் 1970 வரை ஊர்காவற்றுறைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆளுமைமிக்க தலைவர்களுள் ஒருவராக இருந்த பின்னர், கருத்து வேறுபாட்டினால் அதை விட்டு விலகி தமிழர் சுயாட்சிக் கழகத்தைத் தொடங்கியவர்.**

**தமிழர் சுயாட்சியே ஒரே மார்க்கம் என்று அவர் கூறிய போது, பிரிவினையைக் கோருகின்றார் என்ற அபவாதத்தை வைத்தே அவரைத் தோற்கடித்தார்கள் நமது 'பின்னாள் பிரிவினைக் கோரிக்கையாளர்கள்'.**

**மற்றவர் – 1947 முதல் 1960 வரை வவுனியா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். தமிழருக்கு தனியான சுயாட்சி உடைய 'தமிழ் இலங்கை' தேசம் குறித்துத் 1955 இல் நாடாளுமன்றத்தில் சிம்மாசனப் பிரசங்கம் மீதான விவாதத்தில் உரையாற்றியபோது அறிவித்தவர். அதையொட்டி நாடாளுமன்றப் பதவியைத் துறந்து, இடைத் தேர்தலை எதிர்கொண்டு, தமது கொள்கையை நிலைநிறுத்தப் போட்டியிட்டு, அதில் வென்றவர்.**

**அந்த நோக்கத்தை எட்டுவதற்காக 'ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி' என்ற அமைப்பைத் தோற்றுவித்தவர்.**

**இந்த இருவருமே 'தமிழர் சுயாட்சி' பற்றிய பேசியபோது அவர்களைப் 'பிரிவினைவாதிகள்' என்று கிண்டல் பண்ணி, அவர்களின் தமிழர் சுயாட்சிக் கழகத்தையும், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணியையும் தோற்கடித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும், அவர்கள் இருவரும் தனித்தனியாக நின்று பிரசாரப்படுத்திய, தமிழர்களுக்குத் தனி அரசே ஒரே முடிவு என்ற தீர்மானத்துக்கு சில வருடங்கள் கழித்து வந்து, அதனை ஒரு கோஷமாகத் தமிழர் மத்தியில் வைத்து, 1977 பொதுத் தேர்தலில் மகத்தான – வரலாற்று – வெற்றியை ஈட்டினர்.**

**அப்போதும் கூட, சில வருடங்களுக்கு முன்னர் இந்த இருவரும் இதே விடயத்தைச் சொன்னபோது நாம் அதை அடியோடு நிராகரித்துக் கிண்டலடித்து அவர்களைத் தோற்கடித்தோம், அதனைத்தான் நாம் இப்போது எமது கொள்கைகளாக்கியிருக்கிறோம் என்று யாரும் சொல்லவில்லை.**

**இதேபோலத்தான், 2000 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை வீ.ஆனந்தசங்கரி தவறாமல் பல கடிதங்களை புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு எழுதினார். எதிர்காலத்தில் என்ன நடக்கலாம் என்று அந்தக் கடிதங்களில் சங்கரி என்னவெல்லாம் கூறினாரோ அவை எல்லாம் இப்போது நிஜத்தில் நடந்திருக்கின்றன. ஆனால் அதற்காக சங்கரியை யாரும் இன்று தீர்க்கதரிசியாகப் பார்க்கவில்லை. அன்று சூட்டிய 'துரோகி'ப் பட்டம்தான் இன்றும்கூட அவருக்கு.**

**வி.நவரத்தினமும், சி.சுந்தரலிங்கமும், வீ.ஆனந்தசங்கரியும் அவரவர் காலங்களில் கூறிய விடயங்கள் அந்தந்தச் சமயங்களில் எள்ளிநகையாடப்பட்டன. ஆனால் காலக்கிரமத்தில் அவை நிஜமான போதும் யாரும் அவர்களைத் தீர்க்கதரிசிகளாக மதிக்கவில்லை.**

**"இலங்கைத் தமிழரின் பாதுகாப்பில்தான் இந்தியாவின் பாதுகாப்பு தங்கியுள்ளது." – என்று சென்னையில் வைத்து வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் விளக்கவுரை நிகழ்த்தியிருகின்றார்.**

**அது சிலவேளை எள்ளி நகையாடும் கருத்தாக இன்று நோக்கற்படக் கூடும்.**

**தனது பிராந்தியத்தில் 'தன்னுடைய உண்மையான நண்பன் யார், துரோகத்தனமான எதிரி யார் என்பதை அடையாளம் காண்பதில் தொடர்ந்தும் வரலாற்றுத் தவறுகளை இழைத்து வரும் இந்திய இராஜதந்திரத் தரப்புகளுக்கு நீதியரசர் விக்னேஸ்வரினின் இந்தக் கருத்து இன்று நையாண்டிக்குரியதாகக் கூட இருக்கக் கூடும்.**

**ஆனால், பிறிதொரு சமயத்தில் – அது நிஜமாகும்போது, விக்னேஸ்வரன் இப்படி விதந்துரைத்தாரே, நாம் நோக்காமல் – கவனிக்காமல் – தவறிழைத்தோமே என்று சிந்திக்க யாரும் இருப்பார்களோ தெரியவில்லை.**

**ஏனெனில் காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டிருக்கும் இராஜதந்திரிகளில் யாரும் இதனை அப்போது நினைவில் வைத்திருக்கப் போவதில்லை.**

### அம்பாந்தோட்டை விவகாரம்;

# ஒப்பந்தம் குறித்து சீனா மீண்டும் உறுதியளிக்கும்

கொழும்பு, ஜன. 13

கோட்டா – மஹிந்த தலைமையிலான புதிய அரசு அம்பாந்தோட்டை துறைமுகம் குறித்து மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்தாலும் சீனா இந்த ஒப்பந்தம் குறித்து மீண்டும் தனது உறுதிப்பாட்டை தெரிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்தவகையில் இந்த வாரம் இலங்கைக்கு உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு வரும் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி, அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் மாற்றப்படாது என்றும் பிற சீன முதலீட்டு அபிவிருத்திப் பணிகள் பாதுகாக்கப்படும் என்றும் உத்தரவாதத்தினை வழங்குவார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பைத் தளமாகக் கொண்ட வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில், அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்படாது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தாலும், அரசாங்கத்தில் உள்ள மற்றவர்கள் அது மாற்றியமைக்கப்படும் எனக் கூறியுள்ளனர்.

ஆகவே சில நாடுகளின் அழுத்தம் இருந்த போதிலும் இலங்கையில் உள்ள அனைத்து சீன அபிவிருத்தி திட்டங்களும் முன்னோக்கி கொண்டுசெல்லப்படும் என்று வாங் ஜி உறுதியளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டு நாள்கள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று இரவு 11.30 மணிக்கு இலங்கை வரும் சீன வெளிவிவகார அமைச்சர், நாளை 14 ஆம் திகதி மதியம் 12.15 மணிக்கு நாட்டை விட்டு வெளியேறுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது இந்தக் குறுகிய நேரப் பயணத்தின் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் அவர் கலந்துரையாடத் திட்டமிட்டுள்ளார். அத்தோடு மரியாதை நிமித்தமாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவையும் சந்திப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் இலங்கையின் 7 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கோட்டாபய நியமிக்கப்பட்டமையை அடுத்து இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் முதல் சீன அதிகாரியாக வாங் ஜி இருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பேலியகொட மீன் சந்தைக்கு அதிகாலை சென்றார் டக்ளஸ்





இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம், இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம் மற்றும் பேலியகொட மீன் சந்தை ஆகியவற்றிற்கு கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விடுமுறை தினமான நேற்று அதிகாலை திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

மேற்படி மூன்று இடங்களுக்கும் ஏற்கனவே விஜயம் மேற்கொண்ட அமைச்சரினால் சில ஆலோசனைகள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட நிலையில் அவற்றின் முன்னேற்றங்கள் தொடர்பாகக் கண்டறிவதற்காக இந்த முன்னறிவித்தல் இல்லாத திடீர் பயணத்தை நேற்று மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக கடந்த வியாழக்கிழமை இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர், அன்றைய தினமே உடனடியாகக் கூட்டுத்தாபனத்தின் பணியாளர்கள் அனைவரையும் அமைச்சுக்கு அழைத்து தன்னால் அவதானிக்கப்பட்ட விடயங்களையும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கியிருந்தார்.

அதேபோன்று கடந்த நவம்பர் மாதம் 24 ஆம் திகதி பேலியகொட மீன் சந்தைக்கு இதே போன்று அதிகாலை வேளையில் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் , அங்கு நிலவுகின்ற குறைபாடுகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டமையுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

இந்நிலையில், அவற்றின் முன்னேற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக இந்த விஜயம் அமைந்திருந்தது.

அதேவேளை, தென்னிலங்கை மீன்பிடித் துறைமுகங்களுக்கான திடீர் விஜயத்தினை நேற்று முன்தினம் அதிகாரிகள் சகிதம் மேற்கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தென்னிலங்கையின் பல்வேறு துறைமுகங்களிலும் காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றிற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

குறிப்பாக, மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்திற்கு விஜயம் செய்த அமைச்சர், அங்கு காணப்படுகின்ற பாதுகாப்பு ஊழியர்கள் மற்றும் சிற்றூழியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் உடனடியாகத் தற்காலிக நியமனங்களை வழங்குமாறு அதிகாரிக்கு ஆலோசனை வழங்கினார்.

அதேபோன்று பெறலிய, ஹிக்கடுவ, அம்பலாங்கொட மற்றும் பாணந்துறை ஆகிய மீன்பிடித் துறைமுகங்ளுக்கு நேரடியாக விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , அங்கு மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக நேரடியாக அவதானித்தார்.

அத்துடன், அவற்றிற்கான தீர்வு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக மீனவர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளை இன்று திங்கட்கிழமை அமைச்சுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சரின் திடீர் விஜயத்தினால் நெகிழ்ச்சியடைந்த தென்னிலங்கை மீனவர் சமூகத்தினர் அமைச்சரிடம் தங்களின் எதிர்பார்ப்புக்களை உணர்வுகளையும் வெளிப்படையாகத் தெரிவித்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

(ஐ)

**நாளை 14.01.2020 - செவ்வாய்க்கிழமை**

நட்சத்திரம்: மகம் மு.ப 11.18 வரை
திதி : சதுர்த்தி மாலை 6.28 வரை

இராகுகாலம் : 3.34 – 5.04
சுப நேரம் : 11.04 – 12.34

# அதிகாரங்கள் பகிர்வதற்கு மக்களின் ஆணை இல்லை

## 13 இலிருந்து ஆரம்பித்து பேச்சுக்களை நடத்த தயார் என்கிறார் மஹிந்தானந்த



கொழும்பு, ஜன. 13

தற்போதைய அரசுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கான மக்கள் ஆணை வழங்கப்படவில்லை. ஆகவே அந்தச் செயற்பாட்டை முன்னெடுக்க முடியாத சூழல் காணப்படுகின்றது என்று மின்சக்தி இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்கு தீர்வளித்து பொருளாதார ரீதியாக அவர்களை வலுப்படுத்திய பின்னரும் இனங்களுக்கிடையில், பிரச்சினைகள் காணப்படுமாயின் அது குறித்து தமிழ்த் தரப்புக்கள் கோரிக்கை விடுத்தால் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய தனது அக்கிராசன உரையில் பெரும்பான்மை மக்களின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அதிகாரப்பகிர்வை விடவும் பொருளாதார முன்னேற்றமே அவசியம் என்றும் தெரிவித்துள்ள கருத்துக்கள் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு பொருளாதார ரீதியாக அவர்களை முன்னேற்றமடையச் செய்யவேண்டும் என்று நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளார். ஆகவே அது குறித்து செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் தற்போதைய அரசுக்கு அதிகாரங்களை பகிர்வதற்கான மக்கள் ஆணை இல்லை. ஆகவே அந்தச் செயற்றிட்டத்தை உடன் முன்னெடுப்பதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே உள்ளன.

எம்மைப் பொறுத்தவரை வடக்கு மக்களின் உடனடிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதன் பின்னர் ஏனைய அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட விடயங்களின் பிரச்சினைகள் காணப்படுமாயின் அது குறித்து தமிழ்த் தரப்புக்கள் கோரிக்கை விடுத்தால் நாம் பேச்சுக்குச் செய்வதற்கு தயாராக இருக்கின்றோம்.

குறிப்பாக, 13ஆம் திருத்தச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு விடயத்திலிருந்து பேச்சுக்களை மேற்கொள்வதில் பிரச்சினைகள் இல்லை.

அதேநேரம், ஜனாதிபதியின் அக்கிராசன உரையானது தவறாக அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதியைப் பொறுத்தவரை அனைத்துச் சமூகங்களையும் அவர் ஒரேமாதிரியே பார்க்கின்றார். ஆனால் தனக்குப் பெரும்பான்மை சிங்கள மக்களே அதிகமாக வாக்களித்துள்ளார்கள் என்றே அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

அதற்காகச் சிறுபான்மை மக்களை தவிர்த்துச் செயற்படுவதாகக் கூறவில்லை. தமிழ், முஸ்லிம் மக்களின் விடயங்களையும் உள்ளடக்கியே அவருடைய செயற்றிட்டங்கள் அமைந்திருக்கும். அதில் எவ்விதமான மாற்றுக்கருத்திற்கும் இடமில்லை – என்றார்.

# கண்டி, மட்டு, அனுராதபுரம் பொலிஸ் நிலையங்கள் மீது அதிக குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 13

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அறிக்கையின்படி, கடந்த 2018ஆம் ஆண்டில் கண்டி, மட்டக்களப்பு மற்றும் அனுராதபுரப் பொலிஸ் நிலையங்கள் அதிகளவான குற்றச்சாட்டுக்களளை எதிர்கொண்டுள்ளன.

இவற்றின் மீது தலா 20 இற்கும் அதிகமான குற்றச்சாட்டுக்கள் பதிவாகியுள்ளன. அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஆண்டு அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டுக்கான அறிக்கையின்படி, பொல்கஹவெல மற்றும் பதுளை பொலிஸ் நிலையங்களுக்கு எதிராகத் தலா 15 க்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மிரிஹான, பாணந்துறை தெற்கு, கல்முனை, காத்தான்குடி, மாத்தறை, இரத்னபுரி மற்றும் நரமலை பொலிஸ் நிலையங்கள் மீது தலா 10க்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுக்கள் செய்யப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டில் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக 1,651பொது முறைப்பாடுகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 655 முறைப்பாடுகள் பொலிஸ் நடவடிக்கையெடுக்காத விடயம் தொடர்பானவை. 465 முறைப்பாடுகள் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பானவை. பாரபட்சம் தொடர்பாக 224 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 104 முறைப்பாடுகள் தங்களுக்கு எதிராக பொலிஸார் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர் எனக் கூறினர். பொலிஸ் அதிகாரிகளால் தாக்கப்பட்டதாக 30 முறைப்பாடுகள் வந்தன. 3 சித்திரவதை முறைப்பாடுகள்களும் பதிவு செய்யப்பட்டன. பொலிஸ் காவலில் இறப்பு தொடர்பாக 2 முறைப்பாடுகள் வந்தன.

இந்த முறைப்பாடுகளில் 1,190 விசாரிக்கப்பட்டு நாட்டின் சட்டங்களின் அடிப்படையில் தேவையான நிவாரணம் வழங்கப்பட்டதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு கூறுகிறது.

விசாரணைகள் முடிந்ததும், 69 பொலிஸ் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிக்கை மேலும் தெரிவிக்கிறது. (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.13

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் -**

மருதனார்மடம், ரொட்டியாலடி, அம்பலவாணா வீதி, பெரியமதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, மருதனார்மடம் யாழ் நுண்கலைப்பீடம் , புனிதநகர், மாதனை, கற்கோவளம், பருத்தித்துறை வெளிச்சவீடு, கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, சிவப்பிரகாசம் 3ஆம் குறுக்குத்தெரு ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

அவுசதப்பிட்டிய கிராமம், மகாறம்பைக்குளம் P.S.Cஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில் -**

பொயதம்பனையிலிருந்து மடு வரைக்கும், மடு நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் –

**வவுனியாப் பிரதேசத்தில் -**

கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, சூடுவெந்தபுலவு, அவுசதப்பிட்டிய கிராமம் ஆகியவற்றிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# ரஞ்சன் ராமநாயக்கவுடன் எவ்.சி.ஐ.டி. இயக்குநர் உரையாடியதும் கசிந்தது!

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கும், பொலிஸ் நிதிக் குற்றப் பிரிவின் முன்னாள் இயக்குநர், மூத்த டி.ஐ.ஜி.ரவி வைத்தியலங்கரவுக்குமிடையிலான தொலைபேசி உரையாடல் வெளியாகியுள்ளது.

புதிய சிங்கள அமைப்பு இந்த உரையாடலை நேற்று வெளியிட்டது.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோரை விளக்கமறியலில் வைத்தமை குறித்து அதில் பேசப்பட்டது. எனினும், அதில் அழுத்தம் கொடுக்கும் விதமாகவோ அல்லது வேறு அதிகார மீறலாகவோ அந்த உரையாடல் அமையவில்லை.


இதேவேளை, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீதான பி அறிக்கையை பொலிஸ் நிதிக் குற்றப்பிரிவிலிருந்து ரஞ்சன் கோரியுள்ளார். அதை வழங்குவது சட்டமீறல் என ரவி வைத்தியலங்கர மறுத்தபோது, அதை உத்தியோகபூர்வமாக அல்லாமல் இரகசியமாக தருமாறு ரஞ்சன் கோரியுள்ளார். அரை மணித்தியாலத்தின் பின்னர் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் அதிகாரி கூறுவதுடன் அந்த உரையாடல் முடிந்தது. (ஐ)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

காலைக்கதிர் Kalaikathir



# 4 அடுக்குமாடிக் குடியிருப்புகள் வெடிவைத்து அடியோடு தகர்ப்பு



## கொச்சியில் 350 வீடுகள் அழிப்பு

திருவனந்தபுரம்,ஜன.13

கொச்சியில் விதிமுறைகளை மீறி கட்டப்பட்டன என்று கூறப்படும் நான்கு அடுக்குமாடி கட்டடங்கள் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டன.

கேரள மாநிலம் கொச்சி அருகே மரடு பகுதியில் 4 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு இருந்தன. எச் 2 ஓ ஹோலி பெய்த் (19 மாடி), ஆல்பா செரீன் (16 மாடி), ஜெயின் கோரல் கோவ் (17 மாடி) மற்றும் கோல்டன் காயலோரம் (17 மாடி) என பெயரிடப்பட்ட இந்தக் கட்டடங்களில் 350 க்கும் அதிகமான வீடுகள் இருந்தன. மொத்தம் 240 குடும்பங்கள் இந்த 4 கட்டடங்களிலும் தங்கி இருந்தனர்.

இந்நிலையில் இந்த கட்டடங்கள் அனைத்தும் கடலோர ஒழுங்குமுறை மண்டல விதிகளை மீறி கட்டப்பட்டு இருக்கின்றன என உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இதை விசாரித்த நீதிபதிகள் அருண் மிஸ்ரா, நவீன் சின்கா ஆகியோர் அடங்கிய அமர்வு, 4 கட்டடங்களையும் இடித்து அகற்றுமாறு கடந்த ஆண்டு மே மாதம் கேரள அரசுக்கு உத்தரவிட்டது.

இதை எதிர்த்து கட்டுமான நிறுவனங்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மறுஆய்வு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. மேலும் அங்கு வீடு வாங்கியவர்களுக்கு ரூ.25 லட்சம் வீதம் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறினர்.

இதனைத் தொடர்ந்து கட்டடங்களை இடித்து அகற்றுவதற்கான பணிகளை ஒக்டோபர் 18 ஆம் திகதி முதல் கேரள அரசு மேற்கொண்டது. கட்டடங்களை வெடிவைத்து தகர்ப்பதற்காக கடந்த ஒரு மாதமாக அவற்றில் வெடி மருந்துகள் நிரப்பும் பணி நடைபெற்றது. இந்த பணிகள் முடிந்ததை தொடர்ந்து 2 கட்டடங்களை நேற்று முன்தினம் இடிப்பது என முடிவு செய்யப்பட்டது.

இதையடுத்து நேற்று முன்தினம் பகல் 11.17 மணி அளவில் எச் 2 ஓ ஹோலி பெய்த் கட்டடம் முதலில் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டது. பின்னர் சில நிமிட இடைவெளியில் ஆல்பா செரீன் கட்டடமும் தகர்க்கப் பட்டது. இடிபாடுகள் மீது தண்ணீரை பீய்ச்சி புழுதி கட்டுப்படுத்தப்பட்டது.

அதை தொடர்ந்து நேற்றுக் காலை 11 மணிக்கு ஜெயின் கோரல் கோவ், கோல்டன் காயலோரம் ஆகிய இரு கட்டடங்கள் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டன. இந்தப் பணிகள் அனைத்தும் திட்டமிட்டபடி சரியாக நடந்தன என இடிக்கும் பணிகளை மேற்கொண்ட எடிபிஸ் என்ஜினீயரிங் நிறுவன இயக்குனர் உத்கார்ஷ் மேத்தா கூறினார்.

இந்த கட்டடங்களில் வசித்து வந்த குடியிருப்பு வாசிகள் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கட்டடம் இடிக்கும் பணிகள் நடந்த இடத்தில் 1,600க்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டனர்.

# இரசாயன ஆலையில் தீ விபத்து மகாராஷ்டிராவில் எண்மர் சாவு

மகாராஷ்டிரா மாநிலம் பால்கரில் உள்ள இரசாயன ஆலையில் ஏற்பட்ட பயங்கரத் தீவிபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். மேலும் 6 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள அங்க் பார்மா என்ற இரசாயன ஆலையில் பயங்கர தீ விபத்து நேரிட்டது. மிகப்பெரிய வெடிப்புச் சத்தமும் அக்கம் பக்கம் சுமார் 15 கிலோ மீட்டர் தூரம் வரை எதிரொலித்தது. இதனால் ஆலையின் சில பகுதிகள் தகர்ந்தன.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டன.ஆயினும் 13 வயது சிறுமி ஒருவரைக் காணவில்லைஎன்று பெற்றோர்கவலைதெரிவித்துள்ளனர். உயிரிழந்த குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபா நிவாரணம் அளிப்பதாக முதலமைச்சர் உத்தவ் தாக்கரே அறிவித்துள்ளார்.

# பத்திரிகையாளர் போர்வையில் பலே கில்லாடிகளும் ஊடுருவல்

## சென்னை உயர்நீதிமன்றம் சீற்றம்

தமிழகத்தில் பத்திரிக்கையாளர் என்ற போர்வையில் உலாவி வரும் மோசடிப் பேர்வழிகள் விரைவில் களையெடுக்கப்பட வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

பத்திரிகையாளர் என்ற பெயரில் ஒருவர் தொடர்ந்த வழக்கை விசாரித்த போதே நீதிபதிகள் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினர்.

பத்திரிக்கையாளர் என்ற பெயரை, மோசடிப் பேர்வழிகள் பலர் கேடயமாகப் பயன்படுத்துகின்றனர் எனத் தெரிவித்த நீதிபதிகள், மஞ்சள் பத்திரிக்கை நடத்துபவர்களும் பத்திரிக்கையாளர் எனக் கூறிக் கொள்வது வருத்தத்துகுரியது என்று குறிப்பிட்டனர்.

பத்திரிகைகளைப் பதிவு செய்யக் குறைந்தபட்ச விற்பனை உள்ளிட்ட விதிமுறைகளை வகுக்கவும், பத்திரிக்கைத் துறையில் கறுப்பு ஆடுகளை அகற்றவும் நீதிபதிகள் அறிவுறுத்தினர். பத்திரிக்கைகளில் செய்தி என்ற பெயரில் கருத்துத் திணிப்பு நடைபெறுவதாகவும், பத்திரிக்கைச் சங்கங்களை போலி நிருபர்கள் நிர்வகிக்கின்றனர் எனவும் அவர்கள் கூறினர்.

போலிப் பத்திரிக்கையாளர்களால் நேர்மையாகப் பணியாற்றும் உண்மையான பத்திரிக்கையாளர்கள் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவித்த நீதிபதிகள் அரசின் சலுகைகள் உண்மையான பத்திரிகையாளர்களுக்குக் கிடைப்பதில்லை என்றனர்.

உண்மையான பத்திரிக்கையாளர்களுக்கு மட்டுமே அரசு அங்கீகார அடையாள அட்டை வழங்க அறிவுறுத்திய நீதிபதிகள், தற்போது அரசு அடையாள அட்டை பெற்றுள்ள பத்திரிக்கையாளர்கள் மீது குற்ற வழக்கு உள்ளதா எனக் காவல் துறை விசாரிக்க உத்தரவிட்டனர்.

தமிழகத்தில் எத்தனை பத்திரிக்கைகள் உள்ளன என்றும், எத்தனை பேருக்கு அரசு அங்கீகார அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றும், எத்தனை பத்திரிக்கையாளர்கள் மீது குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அரசு பதில் அளிக்க நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

தகவல் தொடர்புத் துறைச் செயலாளர், பத்திரிக்கையாளர் மன்றம் மற்றும் சென்னை பத்திரிக்கையாளர் சங்கத்தை வழக்கில் சேர்த்தும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# ராமகிருஷ்ணா மடத்தில் தங்கி இரவைக் கழித்த பிரதமர் மோடி







இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சனியன்று மேற்குவங்க மாநிலம், ஹௌராவில் உள்ள பேலூர் ராமகிருஷ்ணா மடத்தை அடைந்து அங்கு ஓய்வெடுத்து இரவைக் கழித்தார். நேற்றுக் காலை அவர் அங்கு வழிபாடு செய்தார்.

இரண்டு நாள் பயணமாக கொல்கத்தா வந்த பிரதமர் மோடி கொல்கத்தா ராஜ்பவனில் இரவு தங்கி ஓய்வெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டது.

ஆனால் சனியன்று இரவே அவர் ஹுக்ளி நதிக்கரையில் அமைந்துள்ள ராமகிருஷ்ணா மடத்தை படகில் சவாரி செய்தபடி சென்றடைந்தார். அவரை மடத்தின் அறங்காவலர்கள் வரவேற்று உபசரிப்புகளைச் செய்தனர்.

பேலூர் மடத்தில் இருக்கும் சர்வதேச விருந்தினர் இல்லத்தில் அவர் இரவில் தங்கியிருந்தார். காலை மடத்திலுள்ள ராமகிருஷ்ணரின் சிலைக்கு மரியாதை செலுத்திய அவர், இதையடுத்து சீயர்கள், துறவிகளையும் சந்தித்துப் பேசினார். இதையடுத்து மடத்தில் நடைபெற்ற கூட்டு பிரார்த்தனையிலும் மோடி கலந்து கொண்டு வழிபாடு நடத்தினார்.

சுவாமி விவேகானந்தரின் பிறந்ததினம் தேசிய இளைஞர் தினமாக கடைபிடிக்கப்படுகிறது. இதையொட்டி மடத்தில் நேற்று நடைபெற்ற இளைஞர் மாநாட்டை மோடி தொடங்கி வைத்து உரை நிகழ்த்தினார்.

இதையடுத்து ஹுக்ளி நதியில் படகில் அவர் பயணம் செய்தார். பின்னர் நேதாஜி உள்ளக விளையாட்டு அரங்கில் காலை 11 மணிக்கு நடைபெற்ற கொல்கத்தா துறைமுக கழகத்தின் 150ஆவது ஆண்டு கொண்டாட்ட நிகழ்ச்சியில் மோடி கலந்து கொண்டார்.

சுவாமி விவேகானந்தர் பிறந்த நாளான நேற்று அவருடைய பெயரால் அமைந்த ஆலயத்தில் மோடி தியானம் செய்து வழிபாடுகளைச் செய்தமை விவேகானந்தரைப் பின்பற்றும் பக்தர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

# ஈரான் இராணுவத் தளபதியைக் கொன்றமை ஏன்? காரணத்தை விளக்குகின்றார் அமெரிக்க அதிபர்



தெஹ்ரான்,ஜன.13

ஈரான் இராணுவத் தளபதி காசிம் சுலைமானியை கொலை செய்தமை ஏன் என்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் பதிலளித்துள்ளார்.

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள சர்வதேச விமான நிலையம் அருகே அமெரிக்க இராணுவத்தின் ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் ஈரானின் ஈராணுவ தளபதி காசிம் சுலைமானி கொல்லப்பட்டார். ஜனாதிபதி டிரம்பின் உத்தரவின் பேரில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க இராணுவம் கூறியது.

காசிம் சுலைமானி ஈரானின் மூத்த மத தலைவர் அயத்துல்லா அலி காமெனிக்கு அடுத்தபடியாக உச்ச அதிகாரம் படைத்த தலைவராக இருந்து வந்தார். இதனால் அவரது கொலை ஈரானைப் பயங்கரமாக உலுக்கியது. காசிம் சுலைமானியின் கொலைக்குப் பழி தீர்ப்போம் என ஈரான் சூளுரைத்தது.

அதன்படியே காசிம் சுலைமானியின் உடல் அடக்கம் செய்யப்பட்ட மறுநாளே ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவ நிலைகளைக் குறிவைத்து ஈரான் ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தியது. இதில் சுமார் 80 வீரர்கள் கொல்லப்பட்டனர் என ஈரான் கூறியது.

ஆனால் அமெரிக்கா அதனை முற்றிலுமாக நிராகரித்தது. ஏவுகணை தாக்குதலில் லேசான சேதங்களே ஏற்பட்டன எனவும் தங்கள் நாட்டு வீரர்கள் அனைவரும் பாதுகாப்பாக இருக்கின்றனர் எனவும் ஜனாதிபதி டிரம்ப் கூறினார்.

இந்த நிலையில் ஈராக் உள்பட மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள 4 அமெரிக்க தூதரகங்களை தாக்குவதற்கு காசிம் சுலைமானி சதி திட்டம் தீட்டினார் எனவும், அதனாலேயே அவரைக் கொல்லத் தாம் உத்தரவிட்டார் எனவும் ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த டிரம்ப், காசிம் சுலைமானி கொல்லப்பட்ட விவகாரம் குறித்து முதல் முறையாகப் பேசினார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

சுலைமானி கொல்லப்படுவதற்கு சில நாள்களுக்கு முன்னர் ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தைப் போராட்டக்காரர்கள் சூறையாடியமை உங்களுக்கு நினைவிருக்கலாம். அந்தத் தாக்குதலை ஈரான்தான் நடத்தியது.

அந்தத் தாக்குதலுக்கான ஏற்பாடுகளை செய்தது யார் என்பது உங்களுக்கு தெரியும். அவர் தற்போது உயிரோடு இல்லை. அவர் பாக்தாத் தூதரகத்தை மட்டும் குறிவைக்கவில்லை.

இது தவிர மத்திய கிழக்கு நாடுகளில் மேலும் 3 அமெரிக்க தூதரகங்கள் மீதும் தாக்குதல்கள் நடத்துவதற்கு அவர் சதித் திட்டம் தீட்டியிருந்தார். இதுபற்றிய உளவுத் தகவல்கள் கிடைத்த பிறகு அவரை கொலை செய்வதற்கான உத்தரவைப் பிறப்பித்தேன். - இவ்வாறு அவர் கூறினார்.

இதற்கிடையே, ஈராக்கில் உள்ள அமெரிக்க நிலைகள் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதற்காக ஈரான் மீது அமெரிக்க புதிய பொருளாதார தடைகளை விதித்துள்ளது.

ஈரானிய ஆட்சியின் உலகளாவிய பயங்கரவாத நடவடிக்கைகளை நிறுத்த இந்தப் பொருளாதாரத் தடைகள் அறிவிக்கப்படுகின்றன என அமெரிக்கத் திறைசேரியின் செயலாளர் ஸ்டீவ் முனுச்சின் கூறினார்.

இந்தத் தடைகள் ஈரானின் கட்டுமானம், உற்பத்தி மற்றும் சுரங்க தொழில்களைப் பாதிக் கும் என அவர் தெரிவித்தார்.

## சீனாவிலிருந்து நிமோனியாக் காய்ச்சல் இந்தியாவுக்கு பரவலாம் எனப் பயப்பீதி

சீனாவிடமிருந்து நிமோனியாக் காய்ச்சல் இந்தியாவில் பரவலாம் என்ற அச்சத்தால் சுகாதாரத்துறை சார்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சீனாவில் புதிய வகை காரனோ வைரஸ் காரணமாக புதிய வகை நிமோனியாக் காய்ச்சல் வேகமாக பரவி வருவதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது. காய்ச்சல், நெஞ்சு எரிச்சல் போன்ற உடல் பாதிப்புகளை ஏற்படுத்தும் நிமோனியா காய்ச்சல் நுரையீரல் செயல்பாட்டை பாதிக்கும் என்றும் ஒரே நேரத்தில் பல உறுப்புகளைச் செயலிழக்க செய்துவிடும் என்றும் உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதையடுத்து சீனாவில் இருந்து இந்தியா வரும் பயணிகளை முக்கிய விமான நிலையங்களில் மருத்துவர்கள் பரிசோதித்து வருகின்றனர்.

## அணுக் கதிர்வீச்சுப் பேரழிவு நேர்ந்த புகுஷிமாவில் விலங்குகள் நடமாட்டம்

### விஞ்ஞானிகள் ஆச்சரியம்



ஜப்பானில் பேரழிவுக்கு உண்டான புகுஷிமா அணு உலை பகுதிகளில் விலங்குகளின் நடமாட்டம் காணப்படுவது விஞ்ஞானிகளை ஆச்சரியப்பட வைத்துள்ளது.

2011 ஆம் ஆண்டு நிலநடுக்கத்துடன் ஆழிப் பேரலைகள் தாக்கியதில் ஜப்பானின் புகுஷிமா டாய்ச்சி அணுமின் நிலையம் விபத்துக்குள்ளானது.

அணுமின் நிலையத்தின் அணு உலைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டு கதிர்வீச்சு வெளியானது. முற்றிலும் கைவிடப்பட்ட இந்த அணு உலைப் பகுதியில் நூறுக்கும் மேற்பட்ட இடங்களில் தானியங்கி கமரா மூலம் விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினர்.

அப்போது காட்டுப் பன்றி, குரங்குகள், ரக்கூன் வகை நரிகள், மான்கள், கரடி உள்ளிட்ட உயிரினங்கள் அங்கு சுற்றித் திரிவது தெரியவந்துள்ளது. இதையடுத்து, இந்த விலங்குகள் கதிர்வீச்சில் இருந்து எப்படி தப்பிக்கின்றன என்ற ஆய்வைத் தொடங்க இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## நூறு வயது கொண்ட ஆமை அதன் தாயகம் திரும்புகிறது

### நீண்ட கால இனப்பெருக்கத்திற்கு பின்



அமெரிக்காவில் நீண்ட இனப்பெருக்கத்திற்கு பின் 100 வயது கொண்ட ஆமை ஒன்று அதன் இருப்பிடத்திற்கே திருப்பி அனுப்பப்படுகிறது.

தெற்கு பசிபிக் கடலில் உள்ள காலபாகஸ் தீவு ஆமைகள்தான் உலகிலேயே அதிக நாள்கள் வாழும் உயிரினம் என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வரைமுறையற்ற வேட்டையின் காரணமாக இந்த வகை ஆமைகள் அழிவின் விளிம்புக்குத் தள்ளப்பட்டன. இதையடுத்து அமெரிக்காவில் உள்ள சாண்டியாகோ விலங்கியல் பூங்காவுக்கு எஸ்பானேலா என்ற இடத்தில் இருந்து காலபாகஸ் பெண் ஆமை ஒன்று கொண்டு வரப்பட்டது.

இந்த ஆமை மூலம் விலங்கியல் பூங்காவில் சுமார் 800 ஆமைகள் பிரசவிக்கப்பட்டன. தற்போது அந்தப் பெண் ஆமை 100 வயதைத் தொட்டு விட்டதால் மீண்டும் எஸ்பானேலா பகுதியில் விடுவிக்க முடிவு செய்துள்ளனர்.

## அரசுக்கெதிரான போராட்டத்தில் பங்கேற்ற ஈரானுக்கான பிரி. தூதர் கைதாகி விடுதலை





ஈரானில் அந்நாட்டு அரசுக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்ற பிரிட்டன் தூதர் கைது செய்யப்பட்டமைக்கு பிரிட்டன் அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

ஈரான் தலைநகர் தெஹ்ரானிலிருந்து 176 பயணிகளுடன் புறப்பட்ட உக்ரைன் விமானம் தவறுதலாக சுட்டுவீழ்த்தப்பட்டதாக ஈரான் ஒப்புக் கொண்டது.

இதனைக் கண்டித்து தெஹ்ரானில் உள்ள அமீர் கபீர் பல்கலைகழகம் அருகே நடைபெற்ற போராட்டத்தில், ஈரானுக்கான பிரிட்டன் தூதர் ராப் மேக்கைர் பங்கேற்றார். போராட்டக்காரர்களுடன் சேர்த்து பிரிட்டன் தூதரையும் கைது செய்த பாதுகாப்பு படையினர், சில மணி நேரங்களுக்கு பின்னர் விடுவித்தனர். இதற்கு கண்டனம் தெரிவித்துள்ள பிரிட்டன் அரசு, ஈரான் பகிரங்கமாக சர்வதேச விதிமீறலில் ஈடுபட்டிருப்பதாகக் குற்றம்சாட்டியுள்ளது.

# அம்பாறை மாவட்டத்தில் கடலரிப்பால் மறையும் நிலங்கள்; தவிக்கும் மக்கள்

யூ.எல். மப்றூக்



இலங்கையின் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் தீவிரமடைந்து வரும் கடலரிப்பின் காரணமாக, பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை மக்கள் இழந்து வருகின்றமையோடு, அங்குள்ள மீனவர்களும் தொழில் நடவடிக்கைகளில் பெரிய இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, ஒலுவில் தொடங்கி நிந்தவூர் வரையிலான பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடலரிப்பின் காரணமாக, 400 மீற்றர் வரையிலான நிலப்பகுதிக்குள் கடல் புகுந்துள்ளதாக அப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கூறுகின்றனர்.

அண்மைக்காலமாக நிந்தவூர் பிரதேசத்தில் கடலரிப்பு மிகவும் தீவிரமடைந்துள்ளதால், அதனைத் தடுக்கும் தற்காலிக நடவடிக்கையாக கரையோரைப் பகுதிகளில் மணல் நிரப்பப்பட்ட பைகளை அடுக்கும் நடவடிக்கை நடைபெற்று வருகிறது.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரைப் பிரதேசங்களில் இவ்வாறு கடலரிப்பு தீவிரமடைவதற்கு, ஒலுவில் பிரதேசத்தில் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையே பிரதான காரணம் என, அப்பகுதி மக்கள் நீண்ட காலமாக புகார் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புவியியல் பேராசிரியர் கலீல் கருத்து

ஆனால், சுனாமி ஏற்படுத்திய அதிர்வினால் புவித் தட்டுக்களில் ஏற்பட்ட இடைவெளிகளின் காரணமாக அலைகளின் வேகம் அதிகரித்துள்ளன எனவும், இந்நிலைமையால் கடலரிப்பு தீவிரமடைந்துள்ளதாகவும் பி.பி.ஸி. தமிழுக்குத் தெரிவித்த தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை பேராசிரியர் எம்.ஐ.எம். கலீல், ஒலுவில் பிரதேசத்தில் துறைமுகம் அமைந்துள்ளது கடலரிப்பை இன்னும் ஊக்கப்படுத்தியுள்ளதாகக் கூறினார்.

அம்பாறை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு 4,431 சதுர கிலோ மீற்றர். இதில் கரையோரப் பிரதேசம் 1800 சதுர கிலோ மீற்றர்களாகும். கடற்கரையோரங்களில் இருக்கும் கனிம வளங்கள் தொடரச்சியாக அகழப்பட்டு எடுத்துச் செல்லப்படுவதோடு, இங்குள்ள கண்டல் தாவரங்களும் பெருமளவு அழிக்கப்பட்டுள்ளன. ஜனத்தொகை அதிகரிப்பு மற்றும் மானிட நடவடிக்கைகள் இதற்குப் பிரதான காரணங்களாகும். இதனால்தான் இங்கு கடலரிப்பு ஏற்படத் தொடங்கியது. பிறகு சுனாமிக்குப் பின்னர் அது இன்னும் தீவிரமடைந்தது என்கிறார் அவர்.

ஒலுவில் கடற்கரை வலயம் முருகைக் கற்கள் மற்றும் பாறைகளைக் கொண்ட பகுதியல்ல. இது சாய்வானதொரு பிரதேசமாகும். எவ்வாறாயினும், ஒலுவிலில் துறைமுகம் அமைக்கப்பட்டமை காரணமாகவே கடலரிப்பு ஏற்பட்டது என்கிற குற்றச்சாட்டை முழுவதுமாக ஏற்றுகொள்ள முடியாது என்றும் பேராசிரியர் கலீல் கூறினார்.

கட்டடங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமையினால் மண் அகழ்வு நடவடிக்கைகளும் அதிகரிக்கின்றன. கடற்கரையை அண்டிய இடங்களில் குடியிருப்புகள் மற்றும் ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்படுகின்றமையினால் அங்குள்ள கண்டல் தாவரங்கள் அழிக்கப்படுகின்றன. இவை போன்ற நடவடிக்கைகளால்தான் கடுமையான கடலரிப்பு ஏற்படத் தொடங்கியது.

2006ஆம் ஆண்டிலிருந்து பார்த்தோமானால், இந்தப் பிராந்தியத்தில் ஒவ்வொரு வருடமும் சுமார் 25 மீற்றர் நிலப்பகுதி கடலரிப்புக்குள்ளாகி வந்தது. ஆனால், 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் 60 முதல் 90 மீற்றர் நிலப்பரப்பு ஒவ்வொரு ஆண்டும் கடலரிப்பினால் பறிபோனது.

வன்மையான மண் கொண்ட நிலம் இல்லாமலானதே இவ்வாறான கடலரிப்புக்கு முக்கிய காரணமாகும். மேலும், உலக காலநிலை மற்றும் கடல் நீரோட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் கடலரிப்பை தீவிரப்படுத்தும் ஏனைய காரணிகளாக அமைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

கடலரிப்புக்கு நிரந்தர தீர்வினை காண வேண்டுமானால், கடற்கரையோரப் பகுதிகளில் கண்டல் தாவரங்களை வளர்க்கும் நடவடிக்கையை நாம் ஆரம்பிக்க வேண்டும். கடற்கரைப் பகுதிகளில் பனை மரங்கள் மற்றும் மூங்கில் தாவரத்தை வளர்க்கலாம். இவை தொடர்பில் மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

பேருவளை, மொரட்டுவ மற்றும் பாணந்துறைப் பிரதேசங்களும் இவ்வாறு கடலரிப்பினால் பாதிக்கப்பட்டிருந்தன. அந்த இடங்களில் பெரிய பாறாங்கற்களை இட்டதன் மூலம் கடலரிப்பை தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நெதர்லாந்து மற்றும் சுவீடன் போன்ற நாடுகளின் நிதியுதவி இதற்காகப் பயன்படுத்தப்பட்டன.

ஆனால், மிக நீண்ட காலமாக இந்தப் பகுதிகளில் யுத்தம் இடம்பெற்று வந்தமையினால், அப்போது அபிவிருத்தி இடம்பெறாமல் அம்பாறை மாவட்டம் கைவிடப்பட்டிருந்தது. அதன்போது கடலரிப்பை தடுப்பதற்கான எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆரம்ப நிலையில் கடலரிப்பைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதும், அது தீவிரமடையக் காரணமாகஅமைந் துள்ளது என்றும் பேராசிரியர் கலீல் சுட்டிக்காட்டினார்.

## துறைமுகமே பிரதான காரணம்
## விரிவுரையாளர் நிஜாமிர் கருத்து

ஆனால், ஒலுவில் பிரதேசத்தில் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னரே இந்தப் பிராந்தியத்தில் தீவிர கடலரிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறுகிறார் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை விரிவுரையாளர் கே. நிஜாமிர். தாம் பெற்றுக் கொண்ட தொழில்நுட்ப ரீதியிலான தரவுகள் இதனை நிரூபிப்பதாகவும் அவர் பி.பி.ஸி. தமிழிடம் சுட்டிக்காட்டினார்.

கடலரித்தல் என்பது கடற்கரையோரங்களில் ஏற்படும் சாதாரணமானதொரு இயற்கை நிகழ்வாகும். ஆனால் இது சுழற்சி முறையில் நடப்பதால் பாதிப்புகள் ஏற்படுவதில்லை.

உதாரணமாக, ஓரிடத்தில் அலைகளால் அரிக்கப்படும் மணல், இன்னோரிடத்தில் படியும். பின்னர் காற்றின் திசையும் கடலின் நீரோட்டமும் மாறும் போது, மணல் படிந்த இடத்தில் அரிப்பு ஏற்பட்டு, அந்த இடத்திலிருக்கும் மணல் முன்னர் கடலரிப்பு ஏற்பட்ட இடத்தில் படியும். இதன்போது, கடலரிப்பினால் ஏற்பட்ட பாதிப்பு சீராகிவிடும். இது இயற்கையாக மாறி மாறி நடைபெறும்.

ஆனால், இந்த இயற்கை செயல்முறையில் அசாதாரண நிகழ்வுகள் அல்லது குளறுபடிகள் ஏற்படுமாயின், அரித்தலும் படிதலும் தொடர்ச்சியாகவும் தீவிரமாகவும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும். இதுதான் ஒலுவிலிலும், அதன் அருகாமையிலுள்ள பிரதேசங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஒலுவில் துறைமுக நுழைவாயிலில் இரண்டு அலைத் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் அலைகளால் அரிக்கப்படும் மணல் நகர்த்தப்படும் போது, அதனை துறைமுக நுழைவாயிலில் அமைக்கப்பட்டுள்ள அலைத் தடுப்புகள் தடுக்கின்றன. இதனால்தான் துறைமுக நுழைவாயில் பகுதியில் அதிக மணல் சேர்கிறது.

ஒவ்வொரு கால ரீதியாகவும் செய்மதி (செயற்கைக் கோள்) படங்களை அவதானிக்கும்போது, ஒலுவில் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர், அதன் வடக்குப் பிரதேசங்களிலுள்ள நிந்தவூர் உள்ளிட்ட பகுதிகளில் அரித்தலும், துறைமுகத்தின் தென் பகுதிகளில் மணல் படிதலும் அதிகரித்துள்ளன.

அந்த வகையில், இந்தப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள நில உருமாற்றத்துக்கு, ஒலுவில் துறைமுக நிர்மாணம் முக்கிய காரணியாக அமைந்துள்ளது.

ஒலுவில் துறைமுக நிர்மாணத்தினால் ஏற்பட்டுள்ள கடலரிப்பு தொடர்பில் டென்மார்க் இல் உள்ள ஆல்பொர்க் (புழியிணுலிஷஆ) பல்கலைக்கழகத்தினால் மூன்றாந்தரப்பு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் ஒலுவில் துறைமுக நிர்மாணத்தினால் ஏற்பட்டுள்ள கடலரிப்பை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாது என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் இந்த கடலரிப்பின் தீவிரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மூன்று தீர்வுகளை அவர்கள் முன்வைத்திருந்தனர்.

அவற்றில் முதலாவது – மீன்முள் அமைப்பில் கடற்கரையோரத்தில் ஒரு கட்டுமானத்தை மேற்கொள்வதாகும். அதாவது கடற்கரையோரத்துக்கு சமாந்தரமாக ஒரு கட்டுமானத்தினை செய்து, அதிலிருந்து குறுக்காக மேலும் சில கட்டுமானங்களை மேற்கொள்வதாகும். இதன்போது மணலை அலைகள் அரித்து வேறோரிடத்தில் படிய வைக்கும் செயன்முறை தடுக்கப்படும்.

இரண்டாவது செயன்முறை – கடலரிப்பினால் அலைகள் எடுத்துச் செல்லும் மணல் எங்கு படிகிறதோ, அந்த மணலை கனரக வாகனங்கள் மூலம் ஏற்றிக் கொண்டு வந்து, மீண்டும் அரிக்கப்பட்ட இடத்தில் கொட்டுவதாகும்.

மூன்றாவது முறைமை – அலைத் தடுப்புகளை உருவாக்குவதாகும். ஒலுவில் பிரதேசத்தில் அலைத் தடுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளபோதும் அவை உரிய பலனைத் தரவில்லை. அலைத்தடுப்புகள் அமைக்கும் போது அவை உரிய அளவிலும் உரிய இடைவெளிகளிலும் இருத்தல் வேண்டும்.

தென் பகுதியில் கிரிந்த மீன்பிடி துறைமுகம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர், ஒலுவில் துறைமுக நுழைவாயிலில் அதிக மணல் படிவதைப் போன்று, அங்கும் மணல் படியத் தொடங்கியது. இதற்குத் தீர்வு காணும் நடவடிக்கைக்காக, குறித்த துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கு செலவாகிய நிதியைப் போன்று ஐந்து மடங்கு நிதி செலவிடப்பட்டது. இப்போது ஓரளவு தீர்வும் கிடைத்துள்ளது என்றும் விரிவுரையாளர் நிஜாமிர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் கடலரிப்பு காரணமாக நிந்தவூர் பிரதேசத்தில் 148 ஏக்கர் தனியார் காணிகள் கடலுக்குள் மூழ்கியுள்ளன என நிந்தவூர் பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்ஸார் பி.பி.ஸி. தமிழுக்குக் கூறினார்.

அவற்றில் 120 ஏக்கர் நெற்செய்கை காணிகள் என்றும் 28 ஏக்கர் தென்னை மரங்கள் இருந்த காணிகள் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, சுனாமி தாக்கத்தின் பின்னர் நிந்தவூர் பிரதேசத்தில் கடலரிப்பு தீவிரமடைந்தமைக்கான ஆதாரங்கள் இல்லை என்றும், தமது அவதானிப்பின் படி, ஒலுவில் துறைமுக வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தான் கடலரிப்பு தீவிரமடைந்துள்ளதாகவும் பிரதேச செயலாளர் சுட்டிக்காட்டினார்.

நிலத்தினுள் கடல் உட்புகுந்தமை காரணமாக அங்குள்ள நெற்செய்கைக் காணிகளினுடைய மண்ணின் உவர்த்தன்மை மிகவும் அதிகரித்துள்ளமை ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. இதன் காரணமாக பல ஏக்கர் காணிகளில் விவசாயம் செய்ய முடியாத நிலைவரம் ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட ஒலுவில் பிரதேசத்துக்கே அரசாங்கத்தினால் அதிகளவு இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஒலுவில் பிரதேசத்தில் துறைமுகம் அமையப் பெற்றுள்ளமை காரணமாக, அங்கு பாதிக்கப்பட்டோருக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. ஒலுவில் பிரதேசத்தில் கடலரிப்பினால் நிலம் இழந்தவர்கள், கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடுகள் கிடைத்துள்ளன. ஆனால், நிந்தவூர் பிரதேசம் கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட போதும் உரிய அளவு அவதானம் பெறவில்லை.

இந்த நிலையில்தான் கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட நிந்தவூர் பிரதேசத்தை கவனத்துக்குட்படுத்தும் நடவடிக்கைகளை கடந்த வருடம் தொடக்கம் ஆரம்பித்துள்ளோம். பல்கலைக்கழக விரிவுரையாளர்களை அழைத்து, இங்கு ஏற்பட்டுள்ள கடலரிப்பு தொடர்பில் ஆய்வு ஒன்றைச் செய்தோம்.

இதேவேளை, கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசாங்கத்திடமிருந்து நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் செய்துள்ளோம்.

எவ்வாறாயினும் கடலரிப்பிலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கையினை கரையோர பாதுகாப்பு திணைக்களம் செய்து தருவதாக கூறியுள்ளது. ஆனால், அதற்கான நிதியினைப் பெற்றுத் தருமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். நிதியைப் பெற்றுக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம்.

தற்போது கடலரிப்பின் தீவிரத்தைக் குறைக்கும் தற்காலிக நடவடிக்கையாக மணல் பைகள் கரையோரங்களில் போடப்பட்டுள்ளன. கரையோர பாதுகாப்பு திணைக்களம்தான் இதனைச் செய்துள்ளது. கடலரிப்பைக் கட்டுப்படுத்த வெளிநாடுகளில் இந்த முறையினையும் பின்பற்றுகின்றனர். இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம், மணல் நிரப்புவதற்கான ஒரு தொகைப் பைகளைக் கொள்வனவு செய்வதற்கு தனிப்பட்ட ரீதியில் உதவிகளை வழங்கினார்.

இதேவேளை நிலையான பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ளும் பொருட்டு, கரையோரங்களில் பாறாங்கற்களை போடுவதற்கான திட்டமொன்றினைத் தயாரித்து வழங்குமாறும் கரையோர பாதுகாப்பு திணைக்களத்திடம் கேட்டுள்ளோம் என்றும் பிரதேச செயலாளர் அன்ஸார் தெரிவித்தார்.

ஒலுவில் பிரதேசத்தில் ஏற்பட்ட கடலரிப்பைத் தடுப்பதற்காக அங்கு கரையோரங்களில் பாரிய பாறாங்கற்கள் இடப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையின் காரணமாக கடலரிப்பின்தீவிரம்அங்குகணிசமானளவுகுறைந்துள்ளது.

ஆனால், நிந்தவூர் பிரதேசத்தில் கடலரிப்பு மிகத் தீவிமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நன்றி – பி.பி.ஸி. தமிழ்

# கடுமையான அதிருப்தியில் இராஜாங்க அமைச்சர்கள்!

## பொறுப்புகள் ஏதுமில்லையாம்

கொழும்பு, ஜன. 13

தமக்குரிய பொறுப்புக்களை இதுவரை பகிர்ந்தளிக்காத காரணத்தால் இராஜாங்க அமைச்சர்கள் பலரும் கடும் அதிருப்தியில் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஜனவரி 10 ஆம் திகதியான நிலைவரத்தின்படி 15 பிரதான அமைச்சர்களில் நால்வர் மட்டுமே தமது அமைச்சுப் பொறுப்புக்களை இராஜாங்க அமைச்சர்களுக்குப் பகிர்ந்தளித்துள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, டலஸ் அழகப்பெரும, பிரசன்ன ரணதுங்க மற்றுமொரு அமைச்சரே தமக்கு கீழ் உள்ள நிறுவனங்களையும் கடமைகளையும் இராஜாங்க அமைச்சர்களுக்கு ஒப்படைத்துள்ளனர்.

தற்போதைய அரசில் 38 இராஜாங்க அமைச்சர்கள் உள்ளனர். இவர்களில் எட்டுப் பேருக்கு எவ்வித பொறுப்புக்களும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வடக்குக்கு வாருங்கள் ரஜினி!

## அழைப்பு விடுத்தார் விக்னேஸ்வரன்



சென்னை, ஜன. 13

சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்தை வடக்கு மாகாணத்துக்கு வருகை தருமாறு சிநேகபூர்வமான அழைப்பை நேரில் விடுத்தார் முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்.

தமிழகத்துக்கான பயணமொன்றை மேற்கொண்டுள்ள வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் சென்னையில் நடிகர் ரஜினிகாந்தை சந்தித்தார்.

இலங்கையில் தற்போது தமிழர்களின் அரசியல் நிலைமைகள் குறித்து அவர் இந்தச் சந்திப்பின்போது விளக்கமளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

# பருத்தித்துறை நகரில் உள்ள பான்சி கடைக்குத் தீ வைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 13

பருத்தித்துறை புதிய சந்தையில் உள்ள பான்சி கடை ஒன்று விசமி ஒருவரால் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது. கடையிலிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான பான்சி பொருள்கள் மற்றும் பாதணிகள் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்த நாசகாரச் செயல் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று சி.சி.ரி.வி. காணொலியை அடிப்படையாகவைத்து பொலிஸார் குறிப்பிட்டனர்.

பருத்தித்துறை புதிய சந்தையில் உள்ள சஜித் பான்சி அன்ட் சூ மார்ட் என்ற கடையே இவ்வாறு பெற்றோல் ஊற்றப்பட்டு தீவைக்கப்பட்டுள்ளது.

கடையின் கதவு உடைத்துப் பெற்றோல் ஊற்றப்பட்டு தீ வைக்கப்பட்டுள்ளது. தீவைத்துவிட்டு ஒருவர் அங்கிருந்து தப்பி ஓடும் காட்சி அருகில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகி உள்ளது.

சம்பவ இடத்திலிருந்து இரண்டு பெற்றோல் கான்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ - 07)






# பொலிஸார், இராணுவம் இணைந்து குருநகரில் சுற்றிவளைப்புத் தேடுதல்



யாழ்ப்பாணம், ஜன. 13

குருநகர் பகுதியில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையை நேற்று மேற்கொண்டனர்.

புதிய அரசு பதவியேற்றதன் பின்னர் நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தேசிய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று குருநகர் பகுதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகாலை 5.30 மணி தொடக்கம் காலை 6 மணி வரை இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து இந்தச் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நடவடிக்கையின்போது எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ - 07)

# ஹெரோய்னுடன் இருவர் சுன்னாகத்தில் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜன. 13

சுன்னாகம் பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 85 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரும், புத்தளம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவருமே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124
077 336 6443
075 555 7327
071 777 2377
021 567 5566
021 222 9581
021 222 2050
021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

காலைக்கதிர் Kalaikathir



# வென்றது சிட்னி அணி



பிக் பேஷ் ரி – 20 தொடரின் 31ஆவது லீக் போட்டியில், சிட்னி தண்டர் அணி, 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

சிட்னி மைதானத்தில் நேற்று முன் தினம் சனிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், சிட்னி தண்டர் அணியும், ஹோபார்ட் ஹரிகேன்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிட்னி தண்டர் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய ஹோபார்ட் ஹரிகேன்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 162 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜோர்ஜ் பெய்லீ 43 ஓட்டங்களையும், பென் மெக்டர்மோட் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சிட்னி தண்டர் அணியின் பந்துவீச்சில், டேனியல் சேம்ஸ் மற்றும் கிறிஸ் மோறிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், பிரெண்டன் டாக்ஜெட் மற்றும் லியாம் போவ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 163 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சிட்னி தண்டர் அணி, 19.4 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் சிட்னி தண்டர் அணி 4 விக்கெட்டுகளால் வெற்றியை பதிவு செய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அலெக்ஸ் ஹேல்ஸ் 55 ஓட்டங்களையும், உஸ்மான் கவாஜா 35 ஓட்டங்களையும், அலெக்ஸ் ரோஸ் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஹோபார்ட் ஹரிகேன்ஸ் அணியின் பந்துவீச்சில், கிளைவ் ரோஸ் 2 விக்கெட்டுகளையும், தோமஸ் றொஜர்ஸ், ஸ்கொட் போலண்ட், கைஸ் அஹமட் மற்றும் சிமொன் மிலோன்கா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 36 பந்துகளில் 2 சிக்ஸர்கள் 6 பவுண்ரி அடங்களாக 55 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட அலெக்ஸ் ஹேல்ஸ் தெரிவு செய்யப்பட்டார்.

# இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார் மெடிஸன்!



பிரிஸ்பேன் பகிரங்க ரென்னிஸ் தொடரின் முதல் அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெற்று, அமெரிக்காவின் மெடிஸன் கீஸ், இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று முன் தினம் சனிக்கிழமை நடைபெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில், அமெரிக்காவின் மெடிஸன் கீஸ் சும், செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவாவும் மோதிக் கொண்டனர்.

இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை ஏற்படுத்திய இப்போட்டியில், முதல் செற்றை 6 – 3 என பெட்ரா கிவிட்டோவா கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், மீண்டெழுந்த மெடிஸன் கீஸ், செட்டை 6 – 2 என எளிதாக கைப்பற்றி பதிலடி கொடுத்தார்.

இருவரும் தலா ஒரு செற்றைக் கைப்பற்றியமையால், வெற்றியைத் தீர்மானிக்கும் மூன்றாவது செட் விறுவிறுப்படைந்தது.

இதில் சிறப்பாக விளையாடிய மெடிஸன் கீஸ், செட்டை 6 – 3 என கைப்பற்றி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

# மகுடம் சூடினார் எகடெரினா!



ஹென்சென் பகிரங்க ரென்னிஸ் தொடரில், ரஷ்யாவின் எகடெரினா அலெக்ஸாண்ட்ரோவா முதல்முறையாக சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

கடந்த 4ஆம் திகதி ஆரம்பமான பெண்களுக்கே உரித்தான ஹென்சென் பகிரங்க ரென்னிஸ் தொடர், நேற்று முன் தினம் நிறைவு பெற்றது.

சீனாவில் நடைபெற்றுவந்த இத்தொடரில், கடந்த சனிக்கிழமை மகுடத்திற்கான இறுதிப் போட்டி நடைபெற்றது.

எதிர்பார்ப்பு மிக்க இறுதிப் போட்டியில், ரஷ்யாவின் எகடெரினா அலெக்ஸாண்ட்ரோவாவும், கஸகஸ்தானின் எலெனா ரைபாகினாவும் மோதிக் கொண்டனர்.

இரசிகர்களின் கரகோஷத்திற்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், முதல் செற்றை 6 – 2 என எகடெரினா அலெக்ஸாண்ட்ரோவா கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செற்றில், எகடெரினா அலெக்ஸாண்ட்ரோவாவுக்கு எலெனா ரைபாகினா சற்று நெருக்கடி கொடுத்தார்.

எனினும், இந்த நெருக்கடிகளை திறம்பட சமாளித்த எகடெரினா அலெக்ஸாண்ட்ரோவா, செற்றை 6 – 4 என கைப்பற்றி, இத்தொடரில் முதல்முறையாகச் சம்பியன் பட்டம் வென்றார்.

இதுவரை பெரிதளவில் சாதிக்காத எகடெரினா அலெக்ஸாண்ட்ரோவாவுக்கு ஆண்டின் முதல் சம்பியன் பட்டம் பெரும் ஆறுதலாய் அமைந்துள்ளது.

# நியூசிலாந்து சுற்றுப் பயணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஹர்திக் பாண்ட்யா



உடற்பயிற்சி தேர்வில் தோல்வியடைந்தமையை அடுத்து ஹர்திக் பாண்ட்யாவிற்கு மாற்றாக தமிழக வீரர் விஜய் சங்கர் அணியில் இடம்பிடித்துள்ளார்.

நியூசிலாந்திற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள 'இந்திய ஏ' அணி, இரண்டு 50 ஓவர் போட்டி மற்றும் 2 நான்கு நாள் டெஸ்ட் போட்டிகளில் விளையாட உள்ளது.

இந்தச் சுற்றுப்பயணத்திற்காக காயத்திலிருந்து மீண்டு வந்த நட்சத்திர வீரர் ஹர்த்திக் பாண்ட்யாவின் பெயர் முதலில் இடம்பிடித்திருந்தது.

ஆனால் மும்பையில் நடத்தப்பட்ட உடற்பயிற்சி சோதனையில் அவர் தோல்வியடைந்தமையதால், அவருக்கு பதில் தமிழக ராஞ்சி அணியின் கப்டன் விஜய் சங்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ் டிரஸ்ட் ஒவ் இந்தியாவின் அறிக்கையின்படி, ஹர்திக் இரண்டு கட்டாய உடற்பயிற்சி சோதனைகளில் தோல்வியுற்றார். மற்றும் அவரது மதிப்பெண்கள் சர்வதேச கிரிக்கெட்டுக்கு பொருத்தமானதை விடக் குறைவாக இருந்தது.

எனவே, அவருக்குப் பதிலாக விஜய் சங்கர் மாற்றப்பட்டார் என தெரிவித்துள்ளது.



# பெண்கள் உள்ளிட்ட மூவர் விபத்துக்களில் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 13

இரு வேறு பகுதிகளில் நேற்று முன் தினம் இடம்பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

அநுராதபுரம் – பாதெனிய வீதியில் மஹவ உடுவேரிய ரந்தெனிகம சந்தியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று அதிகாலை கார் ஒன்று வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில், காரில் பயணித்த பெண்கள் இருவர், ஆண்கள் இருவர் மற்றும் சிறு குழந்தை ஆகியோர் காயமடைந்து மஹவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பெண்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, குருநாகல் – கெப்பற்றிகல வீதியில் மோட்டார் சைக்கிள் மோதியதில் பாதசாரி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மோட்டார் சைக்கிள் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவங்கள் தொடர்பில் மஹவ மற்றும் குருநாகல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# சஜித் அடுத்த குறி!

## பொலிஸ் விசாரணைக்கு முன்னேற்பாடுகள் மும்முரம்



கொழும்பு, ஜன. 13

கடந்த அரசில் கலாசார விவகாரத்துக்கு பொறுப்பாக இருந்த அப்போதைய அமைச்சர் சஜித் பிரேமதாஸ மீது கோட்டா அரசின் அடுத்த குறி விழுந்திருப்பதாக தெரிகிறது. அவர் விரைவில் பொலிஸ் விசாரணையை எதிர்கொள்ள வாய்ப்புள்ளது.

அளவுக்கதிகமாக நிதி வழங்கிய விவகாரத்தில் அவர் மீது குற்றம்சாட்டும் முன்னேற்பாடுகள் நடப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மத்திய கலாசார நிதி வழங்கல் பற்றி விவாதிக்கப்பட்ட ஒரு உயர்மட்ட கூட்டத்தில் இந்த விவகாரம் ஆராயப்பட்டுள்ளது. அதற்கு முன்பாக, இந்த விவகாரம் குழுவொன்றின் மூலமாக உத்தியோகபூர்வமாக ஆராயப்பட்டுள்ளது.

கலாசார நிதி வழங்கலின் உண்மைத்தன்மையைக் கண்டறிய முழுமையான விசாரணை நடத்தப்படுமென அரசு தரப்பில் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பௌத்த விகாரைகளுக்கு சஜித் வழங்கிய நிதி தொடர்பாகவே சர்ச்சை ஏற்பட்டுள்ளது. விகாரைகள் ஒவ்வொன்றுக்கும் 1 கோடி ரூபா தொடக்கம் 8 கோடி ரூபா வரை வழங்கப்பட்டுள்ளது.

சில விகாரைகளுக்கு, ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மிகுதிப் பணம் தரப்படுமென்ற கடிதம் வழங்கப்பட்டு ஒரு தொகுதி பணம் வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதான குறுகிய காலத்தில் விகாரைகளுக்கு வழங்கப்பட்ட பணம், வழங்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்ட கடிதங்கள் போன்றவை தற்போது தொகுக்கப்பட்டு வருகின்றன. (ஐ)

# வெள்ளத்தில் மூழ்கியது டுபாய் விமான நிலையம்



கொழும்பு வரும் விமானங்களும் தாமதம்

கொழும்பு, ஜன. 13

டுபாயில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் சில விமானங்கள் அருகில் உள்ள விமான நிலையங்களுக்குத் திசை திருப்பி விடப்பட்டுள்ளன. அத்துடன் சில விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளமையுடன் சில விமானங்களின் சேவை தாமதமடைந்துள்ளது.

பலத்த மழை காரணமாக விமான ஓடுபாதைகள் தண்ணீருக்குள் மூழ்கியுள்ளன.

டுபாயில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வரும் பல விமானங்கள் தாமதம் அடைந்துள்ளன எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# ரஞ்சன் ராமநாயக்க கைதானதில் அரசியல் பழிவாங்கல் இல்லை!

கொழும்பு, ஜன. 13

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்டதன் பின்னணியில் எந்தவொரு அரசியல் பழிவாங்கள் செயற்பாடும் இல்லை என மத்திய மகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ.கமகே தெரிவித்துள்ளார்.

அதேபோல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் எந்தவகையிலும் அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெறா எனவும் அவர் குறிப்பிட்டார்.

தலாவாக்கலை – லிந்துல நகரசபை, அக்கரபத்தனை மற்றும் கொத்மலை ஆகிய பிரதேச சபைகளில் நிலவும் உள்ளூராட்சி மன்றங்களின் குறைபாடுகள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று தலவாக்கலை டெனிஸ் கழக மன்றத்தில் ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ.கமகே பதிலளித்தார்.

ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்டதன் பின்னணியில் எந்தவொரு அரசியல் பழிவாங்கல் செயற்பாடும் இல்லை. இந்த அரசு ஒருபோதும் அவ்வாறு செய்வதில்லை.

ஆனால் இதனை அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாக ஒரு குறிப்பிட்ட கட்சி தனது அரசியல் நன்மைக்காகக் கூறி வருகின்றது. அது தவறானதாகும். இந்த விடயம் பொலிஸாருக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் உரிய முறையில் நீதியை நடைமுறைபடுத்துவார்கள்.

இந்த விடயத்தில் சட்டத்தை நடைமுறைப்படுத்த நீதிமன்றங்களும், சட்டமா அதிபர் திணைக்களமும், பொலிஸ் திணைக்களமும் உள்ளன. அவற்றின் ஊடாக நீதி நிலைநாட்டப்படும்.

எனவே தனிப்பட்ட முறையில் கருத்துக்களை தெரிவிக்காது குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு இது குறித்த பொறுப்புகளை வழங்குவதே பொருத்தமானதாகும். – என்றார். (ஐ)

# பிணைமுறி விசாரணைகளில் குறுக்கீடு செய்தாராம் ரணில்

## இப்போதுதான் சொல்கிறார் மைத்திரி



கொழும்பு, ஜன. 13

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பானவிசாரணைகளில்முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறுக்கீடுகள் செய்தார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ரணில் குறுக்கே நின்றபோதும், தான் தனது கடமைகளைச் செய்தார் என மைத்திரி குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விசாரணைகளுக்கு எதிராக தடைகளை வைத்தார். விசாரணைகளை நடத்திய பொலிஸாருக்கு எதிரான மோசடி விசாரணைகளைத் தொடங்கினார். சில எம்.பிக்களின் தொலைபேசி விவரங்களை ஆய்வு செய்வதற்காக அந்த பொலிஸ் அதிகாரிகள் பணிக்கு கொண்டு செல்லப்பட்டனர். இருப்பினும், தடைகள் இருந்தபோதிலும் நான் விசாரணைகளை மேற்கொண்டேன். அப்போதைய மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனைச் சிங்கப்பூரிலிருந்து ஒப்படைக்க ஆவணமாக்கல் பணிகளை நான் செய்தேன் என மைத்திரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஓய்வுபெறும் ஜனாதிபதிகள் வீட்டுவசதிகளைப் பெற்றுக்கொள்ளும் உரித்துள்ளதெனவும், அதனாலேயே தனது உத்தியோகபூர்வ இல்லத்தை தக்க வைத்துக் கொண்டார் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஐந்து ஜனாதிபதிகள் பதவியை விட்டு விலகிய பின்னர் அவர்கள் அல்லது அவர்களது மனைவியர் அனைவருமே இதுபோன்ற வசதியை பயன்படுத்துகின்றனர் எனவும், 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஜனாதிபதிகள் உரிமைச் சட்டத்தில் இது வரையறுக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவித்துள்ளார்.



# வவுனியா நகரசபை வளாகத்துக்கும் பூங்காவுக்கும் சிவப்பு எச்சரிக்கை!





வவுனியா நகரபை வளாகம் மற்றும் நகரசபை பூங்காவுக்கு சுகாதார வைத்திய அதிகாரிகள் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள நகரசபை வளாகம் மற்றும் நகரசபை பூங்காவில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது நுளம்பு பெருகும் இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இதனையடுத்து சுகாதார வைத்திய அதிகாரிகள் நகரசபை பூங்கா மற்றும் நகரசபை வளாகம் ஆகிய இரண்டுக்கும் சிவப்பு அறிவித்தல் விடுத்துள்ளனர்.

சிவப்பு எச்சரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

இங்கு டெங்கு பரவும் அபாயம் காணப்படுகின்றது. இது உங்களுக்கும் அயலவர்களுக்கும் ஆபத்தானது. எனவே உங்கள் வளாகத்தில் உள்ள அனைத்து நுளம்பு பெருகும் இடங்களையும் அகற்றி நுளம்பு பெருகும் இடங்கள் இல்லை என்பதை மூன்று நாள்களுக்குள் உறுதிப்படுத்துமாறும், இவ் அறிவித்தலை அலட்சியம் செய்யும் பட்சத்தில் உங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினசரி நூற்றுக்கு மேற்பட்ட சிறுவர்கள் , பெரியோர்கள் வருகை தரும் நகரசபை பூங்காவில் டெங்கு பரவும் அபாயம் காணப்படுகின்றது. டெங்கு பரவும் இடங்களை நகரசபையினர் சுத்தப்படுத்துவார்களா என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வவுனியாவில் 826க்கு மேற்பட்டவர்களுக்கு டெங்கு நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார பணிமனையின் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தியாகலிங்கம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பலமான எதிர்க்கட்சியாக உருவெடுப்பதே நோக்கம்

### கூறுகின்றார் சம்பிக்க ரணவக்க

பலமான எதிர்க்கட்சியாக உருவாகவேண்டும் என்பதே ஐக்கிய தேசிய முன்னணியின் நோக்கமாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ரஞ்சன் ராமநாயக்கவின் தொலைபேசி உரையாடல்கள் அடங்கிய இறுவெட்டுக்களைப் பொலிஸார்தான் கைப்பற்றினார்கள்.

ஆனால், இது எவ்வாறு சமூக ஊடகங்களில் வெளியாகின என்பது தொடர்பாகக் கேள்வி இருக்கிறது.

இந்த தொலைப்பேசி உரையாடல்களைக் கேட்டும்போது, அங்கு எந்தவொரு அதிகாரிக்கும் அழுத்தம் பிரயோகிக்கப்படவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது.

அதிகாரிகள் ரஞ்சனிடம் தங்களின் கவலைகள், சவால்கள், அழுத்தங்களைத்தான் கூறியுள்ளார்கள். தேவையில்லாத பிரச்சினைகளை ஏற்படுத்தவே இந்தச் சர்ச்சை எழுந்துள்ளது. எம்மைப் பொறுத்தவரை பலமாக எதிர்க்கட்சியாக இருக்க வேண்டும் என்பது தான் எமது நோக்கமாகும் – என்றார். (ஐ)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.
எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத்தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.
எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.
எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
விரைவில் எழுத்துப்பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.
THE SASIKA LEARNERS
முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)
சசிகா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
DS NO - 882
தலைமைக் காரியாலயம். இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOTLINE: 077 722 6247
0212217678,
0776140361
sasika Learners
sasika driving Schoolgmail.com.
கிளை நிறுவனங்கள்:
வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
0212215472
0703013012
கே.கே.எஸ். வீதி, மல்லாகம்
021224 3393
0703013014
சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021225 1664
0703013016
யாழ்ப்பாணம் (Town)
இல. 281 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
0212215472
0703013012
காரைநகர்
021 225 2454,
070 510 2484
பண்டத்தரிப்பு
021 225 2333,
071 255 4135
பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

# சிங்கள, தமிழ் மொழிகளில் தேசிய கீதம் இசைப்பது மக்களின் ஒற்றுமைக்கும் அமைதிக்கும் வழி கோலும்

கொழும்பு, ஜன. 13

சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தேசியகீதம் இசைக்கப்படுவது எம் அனைவரது மத்தியிலும் ஒற்றுமையும் அமைதியும் ஏற்படுவதற்கு பெரிதும் வழிவகுக்கும் என்று முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷா டி சில்வா சுட் டிக்காட்டியிருக்கிறார்.

1949 ஆம் ஆண்டின் பின்னர் 2015 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசு சுதந்திரதின நிகழ்வில் தமிழ் மொழியிலும் தேசியகீதம் பாடப்படுவதை உறுதிசெய்ததுடன், கடந்த 2019 ஆம் ஆண்டுவரை அது பின்பற்றப்பட்டு வந்தது. எனினும் இவ்வருடம் பெப்ரவரி 4 ஆம் திகதி இடம்பெறவுள்ள சுதந்திரதின நிகழ்வில் சிங்கள மொழியில் மாத்திரமே தேசியகீதம் பாடப்படும் என்று அண்மையில் தகவல்கள் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன. எனினும் அவ்வாறு வெளியான தகவல்களில் எந்தவொரு உண்மையும் இல்லை என்றும் அத்தகைய உத்தியோகபூர்வ முடிவுகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் அரசதரப்பு மறுப்பு வெளியிட்டிருந்தது.

இத்தகைய பின்னணியிலேயே தமிழ்மொழியில் தேசியகீதம் பாடப்படுவதை ஆதரித்து முன்னாள் அமைச்சர் ஹர்ஷா டி சில்வா அவரது உத்தியோக பூர்வடுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை செய்திருக்கிறார்.

அப்பதிவில் கடந்த 2017 ஆம் ஆண்டு சுதந்திர தின நிகழ்வின் போது தமிழ்மொழியில் தேசியகீதம் இசைக்கப்படும் காணொளியை மேற்கோள் காட்டியிருக்கும் அவர், தேசியகீதம் சிங்கள மற்றும் தமிழ் மொழி ஆகிய இரண்டிலும் இசைக்கப்படுவதை நான் ஆதரிக்கிறேன் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

'சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் தேசியகீதம் இசைக்கப்படுவதை நான் ஆதரிக்கிறேன். அது அரசமைப்பின் அடிப்படையிலானதாகும். ஆனால் சட்டம் என்பதையும் தாண்டி, எம்மத்தியில் ஒற்றுமையையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கு அது உதவும்' என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)



ஹர்ஷ டி சில்வா ஆலோசனை

# அதிரடிபடை அதிகாரிகளின் பணிக்கு இடையூறு ஏற்படுத்திய நால்வர் கைது

கொழும்பு, ஜன. 13

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் செயற்பாட்டுக்கு இடையூறு விளைவித்தனர் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

லாதுகல வனப்பகுதியில் வெட்டப்பட்டிருந்த மரக் குற்றிகளை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் டிராக்டரில் ஏற்றிச்சென்றபோது, ஓட்டோவில் வந்த சிலர், அதனை வழிமறித்துள்ளனர்.

அத்துடன், அவர்கள் அதிரடிப் படையினரின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் எனப் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவத்தில் அதிரடிப் படை அதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து, சம்பவம் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அம்பாறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# வென்னப்புவ கடலில் மூழ்கி 3 இளைஞர்கள் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 13

வென்னப்புவ பகுதியிலுள்ள கடலுக்கு நீராடச் சென்ற மூன்று இளைஞர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என வென்னப்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வென்னப்புவ கம்மலவெல பகுதியில் உள்ள கடலுக்கு சென்ற 17 தொடக்கம் 21 வயதுக்கிடைப்பட்ட மூன்று இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்த இளைஞர்களின் சடலங்களை மீட்கும் பணியில் கடற்படையினரும், பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வென்னப்புவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# புதிய தலைமைத்துவத்துடனேயே ஐ.தே.க. தேர்தலில் நிற்கவேண்டும்

## ஹிருணிகா எம்.பி. வலியுறுத்தல்



ஐக்கிய தேசியக் கட்சி புதியத் தலைமைத்துவத்துடன் பொதுத் தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டும் என்பதையே கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் விரும்புகின்றனர் என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

மேலும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமைத்துவத்தை ஏற்க வேண்டும் என்பதே பலரின் நிலைப்பாடாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சியினருடன் பேச்சு நடத்தி, விரைவில் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வொன்று முன்வைக்கப்படும்.

பெரும்பான்மையினர் மாற்றமொன்று ஏற்படவேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள். மாற்றமில்லாமல் பொதுத்தேர்தலுக்கு முகம் கொடுக்க முடியாது என இவர்கள் தெரிவிக்கிறார்கள்.

பெரும்பாலும், சஜித் பிரேமதாஸவைத்தான் அனைவரும் விரும்புகிறார்கள். அத்தோடு, சபாநாயகர் கருஜய சூரிய தொடர்பாகவும் சிலர் கருத்து வெளியிட்டார்கள்.

இன்னும் சிலர் அனைவரையும் ஒன்றிணைத்து பயணிக்க வேண்டும் என்ற விருப்பத்தை வெளியிட்டுள்ளார்கள்.

எவ்வாறாயினும், கட்சியில் மாற்றமொன்றை மேற்கொண்டு புதிய தலைமைத்துவத்துடன் தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்பதுதான் அனைவரதும் நிலைப்பாடாக இருக்கிறது

சஜித் பிரேமதாஸ தலைமைத்துவத்தை ஏற்கவேண்டும் என்றுதான் நாம் விரும்புகிறோம். ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறுகளை வைத்துப் பார்க்கும்போது அதுதான் சரியான முடிவாகவும் அமையும் – என்றார். (ஐ)

# மில்லேனியம் ஒப்பந்தம் குறித்தும் ஆராயவுள்ளார் அலைஸ் வெல்ஸ்

இலங்கைக்கு இன்று உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ள அமெரிக்காவின் தென்னாசியா மற்றும் மத்திய ஆசியாவுக்கான தலைமைப் பிரதி உதவிச் செயலாளர் அலைஸ் வெல்ஸ் இலங்கையுடனான மில்லேனியம் சவால் ஒத்துழைப்பு உடன்படிக்கை குறித்து பேச்சுக்களை மேற்கொள்வார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் அவர் இன்று முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை இலங்கை, இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்குப் பயணிக்கவுள்ளார்.

அவர் கொழும்பில் மூத்த அரச அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகத்தின் உறுப்பினர்களைச் சந்தித்து, இரு தரப்பு மற்றும் பிராந்திய பிரச்சினைகள் குறித்து விவாதிக்க உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் புதிய அரசு இதுவரை கையெழுத்திட மறுத்த எம்.சி.சி ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் குறித்து அவர் விவாதிக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தை ஆய்வு செய்ய ஜனாதிபதி கோட்டாபய நான்கு உறுப்பினர்களைக் கொண்ட குழுவை நியமித்துள்ளமையால், இந்த ஒப்பந்தத்தைப் பரிசீலிக்க அமெரிக்கா இலங்கைக்கு அவகாசம் அளிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அலைஸ் வெல்ஸ் அது குறித்து ஆராய இலங்கை வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)


வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.




அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.01.2020இல் வெளியிடப்பெற்றது.